DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600

Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
கனகாம்பிகை தங்கநகை அடகுமாடம்
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1277 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 25, 2020



# தமது வாழ்க்கைத் துணைகளை கனடாவிற்கு அழைக்க விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி



தமது வாழ்க்கைத் துணைகளை கனடாவிற்கு அழைக்க விண்ணப்பித்தவர்களுக்கான ஒரு மகிழ்ச்சியான செய்தியொன்றை கனடாவின் குடிவரவு, அகதிகள் விவகாரங்கள் மற்றும் குடியகல்வு ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சர் Honourable Marco E. L. Mendicino இன்று ஒட்டாவா மாநகரில் அறிவித்தார். பின்னர் மேற்படிச் செய்தி கனடாவின் பல்லின ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி)

# கனேடியர்களாகிய நாங்கள் எத்தகையோர் என்பதை நினைவுபடுத்துவதற்கான நேரம்தான் இந்த கொரோனாவின் காலம்

## அரசின் சிம்மாசன உரையில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வலியுறுத்து

கனேடியர்களாகிய நாங்கள் எத்தகையோர் என்பதை நினைவுபடுத்துவதற்கான நேரம் இது. மேலும் உலகளாவிய நெருக்கடியைக் கட்டுப்படுத்தி, மீண்டும் சிறப்பாகக் எமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக இந்த நெருக்கடியான காலம் எமக்கு அமைகிறது.

இவ்வாறு கனடியப் பிரதமர் கௌரவ ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் நேற்றைய தினம், கனேடிய நாடாளுமன்றத்தின் மக்களவை புதிய கூட்டத் தொடரை முன்னிட்டு கூடியபோது, கனேடிய அரசின் சார்பான சிம்மாசன உரையை ஆற்றியபோது வலியுறுத்திப் பேசினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "உலகத் தொற்றுநோய் கனடா இதுவரை எதிர்கொண்ட மிக மோசமான பொதுச் சுகாதார நெருக்கடியாக விளங்குகிறது.

(உள்ளே விபரமான செய்தி)

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax



# கனடா-ஒன்ராறியோ மாகாணத்தில் 60 க்கும் மேற்பட்ட மருந்தகங்களில் கொவிட்-19 நோய்க்கான பரிசோதனைகளை மேற்கொள்ளலாம்

## ஒன்ராறியோ மாகாண அரசு அறிவித்தது

(உள்ளே விபரமான செய்தி)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# தியாகதீபன் லெப்.கேணல் திலீபன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு இலங்கைத் தூதரகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம்



எம் மக்களுக்காக உண்ணாவிரதமிருந்து தன் இன்னுயிரை அர்ப்பணித்த தியாகதீபன் லெப்.கேணல் திலீபன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு இன்று காலை 10.00 மணி தொடக்கம் 12.30 வரை ரொரன்ரோ நகரில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை கனடிய தமிழர் மாணவ சமூகம் ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பான விளம்பரம் உள்ளே காணப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு: 416-662-2326

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY RENOVATION
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

# $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

## 416.298.2777

# $375 Mo.

www.mortgageSolutions.ca

## MONTHLY SAVING $2,478

## SAVE UPTO 75% REFINANCE



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கனடாவின் ஆளும் லிபரல் கட்சியும் கோவிட்-19 நோயின் தாக்கமும்

பூமியில் அமைந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும் கோவிட்-19 நோயின் தாக்கம் ஏற்படுத்திய பாதிப்புக்கள மேலும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இவ்வாறான நிலையில் கனடா தேசத்திலும் இந்த நோயின் பாதிப்பு பல கேள்விகளை எழுப்பிய வண்ணம் உள்ளன.

இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் இவ்வருடத்திற்கான சிம்மாசன உரை தலைநகரான ஒட்டாவா மாநகரில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களால் நிகழ்த்தப்பட்டது. மிகவும் நீண்ட நாட்களின் பின்னர் இடம்பெற்ற ஒரு அரசியல் பாரம்பரியத்தின் வெளிப்பாடாக விளங்கும் இந்த 'உரை' இடம்பெற்றிருப்பதால் எதிர்க்கட்சிகளுக்கும் ஒரே 'குஷி'.

சிறுபான்மை அரசாங்கமாக விளங்கும் லிபரல் கட்சியையும் அதன் தலைவரான பிரதமரையும் விமர்சனங்களின் உச்சத்திற்கு கொண்டு செல்ல நினைக்கும் பாங்கு கடந்த இரண்டு நாட்களாக எங்கும் சிதறிய வண்ணம் பாய்ந்து செல்கின்றன. பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் கடந்த சில மாதங்களாக பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததும், பல்வேறு விமர்சனங்களுக்கும் கேள்விகளுக்கும் உள்ளாக வேண்டியும் இருந்தார்.

தற்போதைய சிம்மாசன உரைக்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் இடம்பெறும் போது அது பற்றிய விவாதங்களும் இடம்பெறவுள்ளன என்பதும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு விடயமாகும்.

முக்கியமக சிறுபான்மை அரசாக விளங்கும் ஆளும் கட்சிக்கு ஏதாவது ஒரு எதிர்க்கட்சி தனது ஆதரவை வழங்கினாலேயே ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் தன்னையும் அமைச்சரவையையும் தக்கவைக்க முடியும் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

ஆனால் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியும் கியுபெக் மாநிலத்திற்கே சொந்தமான புளக் கியுபெக்குவா கட்சியும் இந்த வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டோம் என்று ஏற்கெனவே தெரிவித்து விட்டார்கள். மூன்றாவது எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியானது லிபரல் கட்சியை தேவையான அளவிற்கு விமர்சனங்களின் மூலம் கண்டித்து வந்தாலும், சிம்மாசன உரை தொடர்பான வாக்கெடுப்பில் என்ன நிலைப்பாட்டை எடுப்போதும் என்று கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங் அவர்கள் இன்னும் வெளிப்படையாகச் சொல்லவே இல்லை.

கோவிட்- 19 காரணமாக தற்போதைய லிபரல் கட்சி அரசு கனடியர்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் வழங்கிய உதவிகள் மற்றும் சலுகைகள் ஆகியன அரசு மீதான ஒரு ஈர்ப்பைக் ஏற்படுத்தினாலும் நிதி தொடர்பான பல குற்றச்சாட்டுக்கள், பிரதமர் மற்றும் அவருடைய குடும்பம் சார்ந்த உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்டதனால் அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கை சிறிது தளர்ந்த நிலையிலேயே நாட்டு மக்கள் உள்ளார்கள் என்பதும் உண்மை.

அதே வேளை, முன்னைய நிதி அமைச்சரின் சில நிதி தொடர்பான ஈடுபாடு மற்றும் பல செயற்பாடுகள் அவரை இராஜினாமா வரை கொண்டு சென்றாலும் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களின் அரசாங்கத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகவே தெரிகின்றது.

எவ்வாறாயினும் தற்போதை அரசு இந்த கோவிட்-19 தொடர்பான காலப்பகுதியில் இருந்தால் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று ஒரு பகுதி கனேடியர்களோ அன்றி புதிய ஜனநாயகக் கட்சியோ எண்ணினால் சிறுபான்மை அரசாங்கமாக இருந்தாலும், ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையில இந்த ஆட்சி தொடரும் வாய்ப்பு சில வேளைகளில் கிட்டலாம். புதிய ஜனநாயகக் கட்சியின் ஆதரவு கிட்டி, லிபரல் அரசு தனது ஆட்சியைத் தொடர்ந்தால் தொடர்ந்தும் மற்றைய இரண்டு எதிர்க்கட்சிகளின் நெருக்குவாரம் எவ்வாறு இருக்கும் என்பதை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000

NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

CLEANING வேலைக்கு வாடகைக்கு உண்டு
ஸ்காபுறோ மற்றும் பிக்கரிங் நகரங்களில் உள்ள நிறுவனங்களில் காலை நேரங்களில் cleaning வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
Call: (416) 858-6316

BASEMENT வாடகைக்கு உண்டு
Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.
Call: (416) 821-2181

JOBS AVAILABLE
Jobs Available in the GTA immediately.
Postitions Available:
- General Labour / Assembler
- Millwright / Machine Operator
- Glaziers / Electrician
Team Global Employment Agency
Call: (416) 514-0733
Email: resume@teamglobal.ca

GENERAL HELPERS NEEDED
Renovation வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
Full Time / Part Time available.
Call:
416-706-8160

## நூல் வெளியீடு

## சிந்தனைப் பூக்கள் - பாகம் 4

ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும், ஆசிரியக் கலாசாலை விரிவுரையாளராகவும் கடமையாற்றிய பிரபல எழுத்தாளரும், விமர்சகருமான

**திரு. எஸ். பத்மநாதன்**

அவர்களால் எழுதப்பெற்று 'தாய்வீடு' பத்திரிகையில் தொடர்ச்சியாகப் பிரசுரமான ஐம்பது கட்டுரைகளின் தொகுப்பு நூலான 'சிந்தனைப் பூக்கள் - பாகம் 4' நூலின் வெளியீட்டு வைபவம் 2020 ஒக்டோபர் 31ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணி முதல் தமிழ் இசைக்கலா மன்றம் மண்டபத்தில் (1121 Tapscott Road Unit 3) நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்புடன் : விழாக் குழுவினர்
மார்க்கம் முதியோர் நலன்புரிச்சங்கம்

தொடர்பு இலக்கங்கள்:
416-9181318, 416-9368002

# Carefirst Family Health Team
## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com





## உலகத் தமிழர்களை இணைப்பதற்காக கனடா உதயன் பத்திரிகையோடு இணைந்துள்ள மூன்று உலகளாவிய இணையத்தளங்கள்

உலகத் தமிழர்களை இணைப்பதற்காக கனடாவில் கடந்த 25 வருடங்களாக வெளிவரும் உதயன் பத்திரிகையோடு இணைந்துள்ள மூன்று உலகளாவிய இணையத்தளங்கள் கூட்டாக விடுக்கும் அறிவித்தல் இங்கு காணப்படுகின்றது.

மேற்படி இணையத்தளத்தின் விலாசங்கள்: http://www.uthyaannews.ca http://www.nanban.ca http://www.voiceofilankai.lk


## அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?

uthayannews.ca





- 25 ஆண்டுகளாக கனடாவில் வெள்ளிக்கிழமை தோறும் வெளிவரும் எமது 'உதயன்' பத்திரிகையின் uthayannews.ca என்னும் புதிய இணையதளத்தில் உங்கள் அறிவித்தல்கள், மற்றும் விளம்பரங்களை பிரசுரிக்க நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.
- நீங்கள் வழங்கும் அறிவித்தல்கள் மற்றும் நினைவஞ்சலிகள் அனைத்தும் கனடா உதயன் பத்திரிகையிலும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். அத்துடன் எமது சகோதர இணையதளங்களான 'நண்பன்' nanban.ca மற்றும் voiceofilankai.lk இணையதளங்களிலும் பிரசுரம் செய்யப்படும்.



- மிகக் குறைந்த கட்டண விபரங்களை எமது இணையதளங்கள் மற்றும் பத்திரிகை ஆகியவற்றைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள் அல்லது மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளுங்கள்.



குறிப்பு:- சென்னை, கொழும்பு, யாழ்ப்பாணம், கனடா ஆகிய இடங்களில் எங்கள் அலுவலகங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன. எமது கிளை அலுவலகங்களில் 24 மணி நேரமும் உங்கள் அழைப்புகளுக்கு பதிலளிக்க, எங்கள் பிரதிநிதிகள் பணியாற்றுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு:-

கனடா +1 416 587 0552
கொழும்பு +94 777 555 026
யாழ்ப்பாணம் +94 766 143 074
சென்னை +91 7845 00 6977

E-mail :- uthayannews@yahoo.com | uthayannews.chennai@yahoo.com
Web :- uthayannews.ca | nanban.ca | voiceofilankai.lk

இலங்கை செய்திகள்

# யாழ் நீதிமன்றம் விடாப்பிடியாக திலீபன் நினைவேந்தலிற்கான தடையை நீடித்தது



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடையை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இன்று கட்டளையிட்டது. இலங்கையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்தின் உறுப்பினர் ஒரு-வரை அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதியளிக்க நீதிமன்றினால் முடியாது என்று கட்டளையிடப்பட்டது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் நினைவுத் தூபியில் நினைவேந்தல் நடத்தக் கோரிய மனுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திகுமார், கஜேந்திரன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட், மாநகர சபை உறுப்பினர் வரதராசா பார்த்திபன், முன்னாள் மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், க. சுகாஷ், அரசியல் செயற்பாட்டாளர் க.விஸ்னுகாந்த், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வாசுகி சுதாகரன், தமிழ் அரசுக் கட்சியின் பிருந்தாபன் உள்ளிட்ட 20 பேரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டன.

தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் ஊடாக இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுத் தொல்லை ஏற்படும் என்று பொலிஸாரால் பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை (14) அழைக்கப்பட்டது. பொலிஸாரின் விண்ணப்பம் மன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடைவிதித்து உத்தரவிடப்பட்டது.

அத்தோடு வழக்கு செப்ரெம்பர் 21ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் இந்த வழக்கில் பிரதிவாதிகள் 20 பேரையும் மன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளை வழங்கியிருந்தது. அதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த 21ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் சார்பில் சட்டத்தரணி கணதீபன் முன்னிலையாகினார்.

அத்துடன், மூத்த சட்டத்தரணிகள் என்.சிறிகாந்தா, வி.திருக்குமரன் மற்றும் சட்டத்தரணி சுகா' ஆகியோர் இலங்கை குற்றவியல் நடைபடி சட்டக்கோவையின் 106 பிரிவின் 4ஆம் உப பிரிவின் கீழ் இந்த வழக்கை பொலிஸார் தாக்கல் செய்தமை தவறு என்று சட்ட ஏற்பாடுகள், முற்தீர்ப்புகளை வைத்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர். அதனால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று அவர்கள் மன்றுரைத்தனர்.

தியாக தீபம் திலீபன், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் என நிரூபிக்க அவரது வாழ்க்கை வரலாற்றை முன்வைத்து யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமர்ப்பணம் செய்திருந்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களை ஆராய்ந்த மன்று யாழ்ப்பாணம் மாநகர் முதல்வர் உள்ளிட்ட இருவரது சமர்ப்பணங்களை முன்வைக்கும் வாய்ப்பை தக்கவைக்கப்பட்டுள்ளதுடன், கட்டளை இன்று (24) வியாழக்கிழமை வழங்கப்படும் என்று அறிவித்தது.

இன்றைய வழக்கு விசாரணையையடுத்து, தடையை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

# ஐ.நா. மனித உரிமை பேரவை இலங்கையை காட்டுமிராண்டியாக காட்டுகிறது என்கிறார் அமைச்சர் கெஹலிய



ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 45 ஆவது அமர்வில் இலங்கை குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள தயாரில்லை எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

2009 முதல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை போலியான யுத்தக்குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றது இலங்கையை காட்டுமிராண்டி தேசமாக காண்பிக்க முயல்கின்றது எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் சமீபத்தைய கருத்துக்கள் இலங்கைக்கு எதிரான கடந்த கால கருத்துக்களின் தொடர்ச்சி என அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு நாடாக நாங்கள் சரணடைந்தால் மனித உரிமை பேரவை தெரிவிக்கும் அனைத்தையும் ஏற்கவேண்டியிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள சிரேஸ்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளித்துள்ள அமைச்சரவை பேச்சாளர் ரமேஸ்பத்திரன, உயர்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு எதிராக எந்தவித குற்றச்சாட்டுகளும் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

இதனை மனித உரிமை பேரவைக்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் செம்மணி இந்து மயான வளாகத்துக்குள் ஆயுதங்கள் மீட்ப்பு!





யாழ்ப்பாணம் செம்மணி இந்து மயான வளாகத்தினுள் புதைக்கப்பட்டிருந்த குண்டு, மி-திவெடி இன்று (சனிக்கிழமை) காலை விசேட அதிரடிப் படையி-னரால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த விக்டர் சுந்தர் மீது தாக்குதல் நடாத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆவா வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நிசா விக்டரை வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.



இந்தநிலையில் செம்மணி பகுதியில் கைக்குண்டு மற்றும் ஜொனி ரக மிதிவெடி என்பன நிசா விக்டரால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் மீது பிறிதொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கிலும் சந்தேக நபருக்கு எதிர்வரும் 22ஆம் திகதி-வரை விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை விக்டர் சுந்தர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலில் படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதி-தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருக-றார்.

நாயன்மார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த விக்டர் சுந்தர், பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பொ-லிஸாரால் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் ஆவா என பொலிஸாரால் விழிக்கப்படும் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நிசா விக்டர் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ ாரால் நேற்றுமுன்தினம் இராணுவத்தினரின் உதவியுடன் ஊர்காவற்துறையில் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசார-ணைகளின் அடிப்படையில் அவர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் நளினி சுதா-கரன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

"சந்தேக நபர், நபர் ஒருவரை வெட்டி படுகா-யம் ஏற்படுத்தியதன் மூலம் அவரைக் கொலை செய்ய முயற்சித்துள்ளார். அத்தோடு அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் செம்மணி பகுதியில் கைக்குண்டு மற்றும் ஜொனி ரக மிதிவேடி என்பனவும் மறைத்து வைத்திருந்தமை காண்பிக்கப்பட்டுள்ளது. அவை நீதிமன்றத்தின் உத்தரவில் மீட்கப்படவேண்டும்" என பொலிஸார் மன்றுரைத்தனர்.

சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பிணை விண்ணப்பத்தை முன்வைத்தனர். இருதரப்பு விண்ணப்பத்தையும் ஆராய்ந்த மன்று, சந்தேக நபரை எதிரட்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

# பாலியல் துஷ்பிரயோகம்: ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ உத்தியோகத்தர் குற்றவாளி என டில்லி நீதிமன்றம் தீர்ப்பு

**- சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்**




இந்தியத் தலைநகர் டில்லியில் இலங்கை அரச விமான சேவையான ஸ்ரீலங்கா எயர்லைன்ஸின் உயரதிகாரியாக இருந்த லலித் டி சில்வா பாலியல் வழக்கொன்றில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

புது டில்லியில் அவர் அந்த நிறுவனத்தின் பிராந்தியப் பணிப்பாளராகக் கடமையாற்றிய போது உடன் பணியாற்றிய இந்தியப் பெண்ணொருவருடன் தகாத முறையில் உரையாடி அவரது கண்ணியத்துக்கு களங்கம் ஏற்படுத்தினார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது. அவர் மீது புகார் அளிக்கப்பட்ட நிலையில் 2014ல் வழக்கு நீதிமன்றத்துச் சென்றது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு நீதிபதி தேவ் சரோஹா அவரைக் குற்றவாளி என்று அறிவித்துத் தீர்ப்பளித்தார்.

இணையதளம் மூலமாக இந்தத் தீர்ப்பளிக்கப்பட்டது. தற்போது இலங்கையில் உள்ள லலித் டி சில்வாவும் தீர்ப்பு அளிக்கப்பட்ட போது இணையத்தின் மூலம் தொடர்பிலிருந்தார். அவருக்கான தண்டனை எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதியன்று அறிவிக்கப்படவுள்ளது.

இந்தியக் குற்றவியல் சட்டத்தின் பிரிவு 509ன் படி ஒரு பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடுவது, அவரைத் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசுவது, பாலியல் ரீதியாகப் பேசி மனவுளைச்சலை ஏற்படுத்துவது, தனி நபரின் கண்ணியத்தைக் குலைப்பது, பொது இடத்தில் பெண்களை இழிவுபடுத்துவது போன்ற குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன.



View Business

Daily Status
In The Court Of :Metropolitan Magistrate
CNR No. :DLND020028202014
Case No. :Cr Cases/0049796/2016
STATE Versus LALITH DE SILVA
Date :16-09-2020

| | | |
|---|---|---|
| Business | : | convicted |
| Next Purpose | : | Order |
| Next Hearing Date | : | 17-11-2020 |
| Metropolitan Magistrate | | |

நீதிமன்ற ஆவணங்களின் படி 2009ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8 ஆம் திகதியன்று டி சில்வா குறிப்பிட்ட அந்தப் பெண்ணை தனது அறைக்கு அழைத்து கண்ணியமற்ற வகையில் பேசியதாக நீதிமன்ற ஆவணங்கள் கூறுகின்றன.

அவர் மீதான குற்றச்சாட்டை நீதிமன்றம் உறுதி செய்துள்ள நிலையில் அவருக்கு அதிகபட்சமாக மூன்றாண்டுகள் சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.



THE COURT OF SH. SUNIL KUMAR SHARMA
METROPOLITAN MAGISTRATE-05, NEW DELHI DISTRICT,
PATIALA HOUSE COURTS, NEW DELHI

CHARGE

I Sunil Kumar Sharma, MM-05, New Delhi, do hereby charge you Lalith De Silva s/o Sh. Piyadigamage Chandrasena De Silva as under:-

That on 08.10.2009 at about 2:30 pm in the cabin of the office of Sri Lanka Airlines at World Trade Center Babar Road, within the jurisdiction of PS Barakhamba Road you intending to insult the modesty of [redacted] wife of [redacted] uttered "Did your husband fuck you? How was it?" and "What should I call you now, should I call you prostitute, hooker or bitch?" to her with the intention that the same be heard by [redacted] for the purpose of intruding upon her privacy and thus you have thereby committed an offence punishable u/s 509 IPC and within the cognizance of this court.

And I hereby direct that you be tried by this court for the aforesaid offence.

(Sunil Kumar Sharma)
MM-05/PHC/New Delhi/18.12.2014

The charge has been read over and explained to the accused in simple Hindi Language and questioned as under:-

Q. Do you understand the charge framed against you?
A. Yes.
Q. Do you plead guilty or claim trial?
A. I do not want to plead guilty and claim trial.

ROSAC

(Sunil Kumar Sharma)
MM-05/PHC/New Delhi/18.12.2014

ஆனால் தன் மீதான குற்றச்சாட்டுக்களைத் தனது சட்டத்தரணி மூலம் அவர் தீவிரமாக மறுத்துள்ளார். தான் குற்றவாளி அல்ல என்றும் வழக்கை எதிர்கொள்ளத் தயார் என்றும் அவர் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

இப்படியான சம்பவமொன்று நடைபெற்றதாகப் புகார் அளிக்கப்பட்டதையடுத்து குறிப்பிட்ட அந்த பெண் பணியாளர் கேரள மாநிலம் கொச்சி நகருக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அதேவேளை அவர் சிறந்த பணியாளர் என்று ஸ்ரீலங்கா எயர்லைன்ஸால் பாராட்டப்பட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவின்படி பாதிப்புக்குள்ளான அந்தப் பெண் ஊழியரின் பெயர் வெளியிடப்படவில்லை. எனினும் குற்றவாளி என்று நீதிமன்றத்தால் கூறப்பட்டுள்ளதால் டி சில்வாவின் பெயர் வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே பணியிடத்தில் பெண்கள் பாதுகாப்புத் தொடர்பில் இந்தியாவில் 2013ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் அதற்கான வழிமுறைகளை ஸ்ரீலங்கா எயர்லைன்ஸ் செய்திருக்கவில்லை என்று மற்றொரு வழக்கு நிலுவையில் உள்ளது.

அந்தச் சட்டத்தின்படி பணியிடத்தில் பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படாமல் இருக்க முறையான பாதுகாப்பும், குற்றச்சாட்டுகள் எழுந்தால் அதை உள்ளக ரீதியாக விசாரிக்க பெண் அதிகாரி ஒருவரின் தலைமையில் விசாரணைக் குழு ஒன்று நிரந்தரமாக இருக்க வேண்டும்.

லலித் டி சில்வா தற்போது இலங்கையில் உள்ளதால் அவருக்கான தண்டனை அறிவிக்கப்படும் திகதியில் அவர் நீதிமன்றில் எப்படி ஆஜராவார் எனும் கேள்விகள் எழுந்துள்ளன.

அவருக்கு நீதிமன்றம் சிறை தண்டனை விதித்தால் அது எப்படி நிறைவேற்றப்படும், இலங்கை அரசு இதற்கு ஒத்துழைப்பு அளிக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.




# தியாகி திலீபனின் நினைவு நிகழ்விற்கு தடை விதித்த இலங்கை அரசிற்கு கண்டனம் தெரிவித்து இயக்குனர் கௌதம் சென்னை துணைத் தூதரகத்திற்கு கடிதம்



அகிம்சை போராளி “தியாக தீபம்” திலீபன் அவர்கள் பனிரெண்டு நாட்கள் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உயிர்துறந்த வரலாற்று பெருநிகழ்வினை எங்களின் தமிழீழ மக்கள் கடந்த 32 ஆண்டுகளாக நிகழ்வாக நடத்தி போற்றி வந்தனர். திடீரென்று இந்த ஆண்டு இலங்கை அதிகார வர்க்கம் திலீபன் அவர்களின் நினைவு தின நிகழ்வினை நிறுத்த சொல்லி தடை விதித்திருகிறது. அறமற்ற இச்செயலுக்கு தமிழீழ மக்களின் தொப்புள்கொடி உறவுகளான நாங்கள், எங்களின் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு இயக்கும் கௌதம் சென்னையில் உள்ள இலங்கை துணைத்’தூதரகத்திற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பெற்றுள்ள்து.

மேற்படி கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

முதன்மை அதிகாரி
இலங்கை துணை தூதரகம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை 34.

ஐயா,

அகிம்சை போராளி “தியாக தீபம்” திலீபன் அவர்கள் பனிரெண்டு நாட்கள் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உயிர்துறந்த வரலாற்று பெருநிகழ்வினை எங்களின் தமிழீழ மக்கள் கடந்த 32 ஆண்டுகளாக நிகழ்வாக நடத்தி போற்றி வந்தனர். திடீரென்று இந்த ஆண்டு இலங்கை அதிகார வர்க்கம் திலீபன் அவர்களின் நினைவு தின நிகழ்வினை நிறுத்த சொல்லி தடை விதித்திருகிறது. அறமற்ற இச்செயலுக்கு தமிழீழ மக்களின் தொப்புள்கொடி உறவுகளான நாங்கள், எங்களின் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

1987-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள், இந்திய ஒன்றியத்திற்கு ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் முருகன் கோவில் வாசலில் இந்திய ஒன்றிய தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் அவர்களின் வழியில் உண்ணாநிலை அறப்போராட்டம் நடத்தியவர் திலீபன் அவர்கள். அதிகாரத்தின் ஆணவத்தோடு திலீபன் அவர்களை கொச்சைப்படுத்தும் விதமாக “தீவிரவாதி” என பட்டம் சுமத்தி அவமானப்படுத்துவதையும், எங்கள் தமிழீழ மக்களின் உரிமைகளை தொடர்ந்து பறித்துக் கொண்டிருப்பதையும் இனியும் நாங்கள் வேடிக்கை பார்க்க முடியாது.

இதோடு மட்டுமல்லாமல் தமிழீழம் என்கிற எங்களின் உயிர்ச்சொல்லை தமிழீழத்தில் இனி எவராவது பயன்படுத்தினால் அது “தேச துரோகம்” என இலங்கை அதிகாரத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டதாக அறிகிறோம். எங்கள் பெருமைமிக்க தமிழீழ மண்ணின் வரலாற்றை தெரிந்துகொண்டு திரு. ராஜபக்சே அவர்களோ, திரு. கோத்தபயா ராஜபக்சே அவர்களோ இனி பேசட்டும்.

இலங்கை என்னும் தமிழ்ச் சொல்லே “லங்கா” என இன்றுள்ள இலங்கையைக் குறிக்கும் சொல்லாகியது. சிங்களவர்கள் தங்கள் நாடு என்று சொல்லும் லங்காவுக்கு அவர்களுடைய சிங்கள மொழியில் ஒரு சொல் கூட இல்லை. அவர்கள் நடத்தும் ஆட்சியை “ரஜ” என்கிறார்கள். அரையன் எனும் தமிழ்ச் சொல் அரசை குறித்த சொல்லாகும். இதையே “ரஜ” என சிங்களவர்கள் தங்கள் மொழியில் இணைத்துக் கொண்டார்கள். சிங்கள மொழியில் அவர்கள் நாட்டை குறிக்கவும் சொல் இல்லை. அவர்கள் அரசை குறிக்கவும் சொல் இல்லை. இவர்கள்தான் இப்போது “தமிழீழம்” எனும் ஒரு தமிழர் நாடு இலங்கைத் தீவில் இல்லை என்கிறார்கள்.

அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் “தமிழ்”, “ஈழம்” ஆகிய சொற்கள் காணப்படுவதாக புதைபொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இக்காலத்தில் இலங்கையை ஆண்ட மன்னன் தேவநம்பிய தீசன் ஒரு தமிழனாவான். அவன் தந்தையின் பெயர் மூத்த சிவா. இனத்தால் தமிழனாகவும், மதத்தால் சிவ சமயத்தனாகவும் அவன் இருந்தான். இவன் காலத்தில் இலங்கைத் தீவு தமிழர் தேசமாகவே இருந்தது. இதே கி.மு. மூன்றாம் நூற்றாண்டில்தான் புத்த சமயம் இலங்கையில் நுழைந்து தேவநம்பியதீசன் ஒரு புத்த மதத்தினனாக மாறுகிறான்.

இலங்கை தமிழர்கள் சைவத் தமிழர்கள்- புத்தமத தமிழர்கள் என இரு பிரிவாகிறார்கள்.

சிங்கள மொழியும், இனமும் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலேயே தோற்றம் பெறுவதை பார்க்கிறோம். இதன் பின்பே இலங்கைத் தீவு இரு தனித்தனி மதங்களாக கொண்ட இரு தேசிய இனங்களாய் சிதைகிறது. புத்த சிங்களவர்கள் ஒரு தேசிய இனமாகவும்- சைவத் தமிழர்கள் ஒரு தேசிய இனமாகவும் ஆன காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டேயாகும். 50,000 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை தமிழ்நாட்டோடு இணைந்திருந்த காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ்மொழி தோன்றியதாக மொழியியல் வரலாற்றறிஞர் பாவாணர் கூறுகிறார். இக்கோட்பாட்டை மேனாட்டு மொழி இயல் மேதையான லெவிட் போன்றோர் ஒப்புக் கொண்டுள்ளனர். தமிழ் மொழி தோன்றி 50,000 ஆண்டுகள் ஆகின்றன. சிங்கள மொழி தோன்றி 1400 ஆண்டுகள் கழிந்து உள்ளன. 50,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தமிழர்களுக்கு இலங்கையில் ஒரு நாடில்லை என்று 1400 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தோன்றிய சிங்களர்கள் கூறுவது திமிர்த்தனமாக இருக்கிறது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இலங்கைத்தீவு இரண்டு தேசிய இனங்களின் இரண்டு தாயகங்களில் நாடானது. ஒன்று சிங்கள சிறீலங்கா இன்னொன்று தமிழீழம் சிறீலங்கா தமிழீழம் என்னும் நாட்டு பெயர்கள் பின்பு தோன்றியிருந்தாலும், இரண்டு தாயகங்கள், இரண்டு தேசிய இனங்கள், இரண்டு அரசுகள், எனும் நிலை சிங்கள மொழியும் இனமும் தோன்றிய கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்பு தோன்றிற்று.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாநிலம் நீண்ட நெடுங்காலமாகத் தமிழர்களின் தாயகமாகவே விளங்கி வருகிறது.

1833 இல் வெளியான கோல்புருக் ஆணைக்குழு அறிக்கையில் ' “he North and East of Srilanka is the ancestral Home Land of Tamils’’ என குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மைதான் இந்நிலப்பரப்பைத் தமிழ் மன்னர்கள் பலர் பிற்காலத்தில் கூட நீண்ட நெடுங்காலம் அரசு கொண்டு ஆண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண அரசு சங்கிலியன் ஆட்சிக்கு உட்பட்டதாய் இருந்தது. வன்னி அரசு பண்டார வன்னியனின் ஆளுமையின் கீழ் இருந்தது. திருக்கோணமலை அரசு குளக்கோட்டனின் பேரரசாக இருந்தது. மட்டக்களப்பு அரசு அரசி உலக நாச்சியாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

தமிழீழம் தமிழர் தாயகம் என்பதை சிங்களவர்கள் ஒப்புக் கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும் தமிழீழம் தமிழர் தாயகமே. இப்படிப்பட்ட உண்மையான உன்னதமான வரலாறுகளை இன்னும் எவ்வளவு நாட்களுக்கு மூடி மறைக்க முடியும்?

தாய்த் தமிழகத்து உறவுகளான நாங்கள் விரும்புவதெல்லாம் எப்பொழுதும் போல “தியாக தீபம்” திலீபன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு தொடர்ந்து நிகழவேண்டும். தமிழீழம் எங்கள் தமிழர்களின் பூர்வகுடி மண். தமிழீழ மண்ணை ஆண்டு வாழ்ந்தவர்கள் எங்கள் தமிழீழ மக்களும் மன்னர்களும். இறுதி யுத்தத்தில் ஒன்றே முக்கால் லட்சம் தமிழர் உயிர்களை இனப்படுகொலை செய்ததற்குப் பிறகும் எங்கள் தமிழீழ மக்களின் உரிமைகளை தொடர்ந்து பறித்து, கலை கலாச்சார பண்பாட்டு சிதைவுகள் நடத்தப்படுவதை இனியும் வேடிக்கை பார்க்க முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் மேற்கண்ட அனைத்தையும் சரி செய்து கொள்ள வேண்டுமென அறத்தோடு கேட்டுக்கொள்கிறோம்.

வ.கௌதமன்

தமிழ்ப் பேரரசு கட்சி,
பொதுச்செயலாளர்,
“சோழன் குடில்”

# தமது வாழ்க்கைத் துணைகளை கனடாவிற்கு அழைக்க விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி



தமது வாழ்க்கைத் துணைகளை கனடாவிற்கு அழைக்க விண்ணப்பித்தவர்களுக்கான ஒரு மகிழ்ச்சியான செய்தியொன்றை கனடாவின் குடிவரவு, அகதிகள் விவகாரங்கள் மற்றும் குடியகல்வு ஆகியவற்றுக்கு பொறுபபான அமைச்சர் Honourable Marco E. L. Mendicino இன்று ஒட்டாவா மாநகரில் அறிவித்தார். பின்னர் மேற்படிச் செய்தி கனடாவின் பல்லின ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

கௌரவ அமைச்சர் Honourable Marco E. L. Mendicino அவர்கள் ஏற்கெனவே தங்கள் வாழ்க்கைத் துணைகளை கனடாவிற்கு அழைக்கவிரும்பியவர்கள் மிக விரைவில் அவர்களை கடனாவிற்கு அழைக்கும் வகையில், வாழ்க்கை துணைகளை அழைக்க விண்ணப்பித்த கனடியர்கள் தங்கள் குடும்பங்களோடு ஒன்றிணையும் வகையில் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் தனது அமைச்சின் அதிகாரிகளுக்கும் வெளிநாடுகளில் உள்ள கனடாவின் தூதரங்களுக்கும் பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

இவ்வாறான துரித நடிவடிக்கைகளை எடுக்கும் விடயத்தில் கனடாவின் குடிவரவு, அகதிகள் விவகாரங்கள் மற்றும் குடியகல்வு அமைச்சானது, கனடாவிலும் வெளிநாடுகளில் உள்ள தூதரங்களிலும் வாழ்க்கைத்துணைகளுக்கு கனடாவிற்கு செல்லும் நாளை விரைந்து தீர்மானிப்பதற்கான பணிகளில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் விசாக்களுக்கான விண்ணப்பங்களை பரிசீலிக்கும் குழுவினர் இனிமேல் மொத்த விண்ணப்பங்களில் சுமார் 66 வீதமான விண்ண்பபங்கள் வாழ்க்கைத் துணைகளை அழைக்கும் விண்ணப்பங்கள் என்ற வகையில் முக்கியத்துவம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது

விண்ணப்பப் படிவங்கள் மூலமான விசா விண்ணப்பங்களைப் பரிசோதிக்க புதிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் வேகமாக செயற்பாடுகளை செய்யும் வகையில் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் தூதரங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் தகுந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாவும் அமைச்சரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விண்ணப்பங்களுக்குரியவர்களை நேரடியாக அலுவலகங்களுக்கு அழைத்து நேர்முகப்பரீட்சைகளை நடத்துவதற்குப் பதிலாக, இணையவழி ஊடாக நேர்முகப் பரீட்சைகளை நடத்தும் வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாழ்க்கைத் துணைகளை அழைக்கும் விடயம் தொடர்பாக தனது கருத்தை பதிவு செய்துள்ள அமைச்சர் Honourable Marco E. L. Mendicino அவர்கள், ‘‘கடந்த சில மாதங்களாக இந்தப் பணிகளை நாம் விரைவாகச் செய்ய முடியவில்லை. இனிவரும் காலங்களில் வாழ்க்கைத் துணைகளை அவர்களுக்கு உரியவர்களோடு இணைப்பதற்கான துரிதமான பணிகளை எமது அமைச்சு அதிகாரிகளும் பணியாளர்களும் சிறந்த முறையிலும் விரைவான முறையிலும் செய்வார்கள் என்று நாம் நிச்சயமாக நம்புகின்றேன்’’ என்று குறிப்பிட்டுள்ளார்.

**யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்:**

# திலீபனின் பேரால் ஒன்றிணைந்த கட்சிகளின் முன்னாள் உள்ள பணி

திலீபனின் பேராலாவது ஒரு தொகுதி தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்திருக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இவ்வாறு கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் முயற்சித்தார்கள். ஆனால் முடியவில்லை. ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்தன. ஒரு கட்சி-தமிழ் தேசிய மக்கள் முன்னணி-மறுத்து விட்டது. ஆனால் இம்முறை முதலில் பின்னடித்தாலும் பின்னர் அக்கட்சியானது திலீபனின் விடயத்தில் ஒன்றிணைந்து செயற்படத் தயாராகியது. கடந்த சனிக்கிழமை கட்சிகள் ஒன்றுபட்டு ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை எழுதின. இக்கட்டுரை பிரசுரிக்கப் படும் பொழுது அக்கடிதத்தின் முடிவு பெரும்பாலும் தெரிய வந்துவிடும். நீதிமன்ற தீர்ப்புக்கு நீதிமன்றத்தைத் தான் நடவேண்டும் ஜனாதிபதியை நாட முடியாது என்ற பொருள்பட அமைச்சரவைப் பேச்சாளர் கருத்துத் தெரிவித்துள்ளார். அதுதான் ஜனாதிபதியின் பதிலாகவும் அமையுமா?




அமைச்சரவைப் பேச்சாளர் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் காலைக் கதிர் பத்திரிகை-இது சுமந்திரனை முழுமையாக ஆதரிக்கின்றது- அதன் ஆசிரியர் எழுதும் ஒரு பத்தியில் திலீபனை நினைவு கூரும் விவகாரத்தை ஒரு நீதிமன்ற விவகாரமாக அதாவது சட்டப் பிரச்சினையாக பார்ப்பது தெரிகிறது. முன்னைய நல்லாட்சி அரசாங்கத்தின் போது இவ்வாறான பிரச்சினைகள் வரும் பொழுது நீதிமன்றத்தை நாடி வாதாடி நீதியைப் பெற்றுக் கொடுத்தது சுமந்திரன் என்றும் இம்முறை அவ்வாறு தமிழரசுக் கட்சியை சேர்ந்தவர்கள் சுமந்திரனை நாடவில்லை என்றும் காலைக் கதிர் எழுதியுள்ளது.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். நினைவு கூர்தல் எனப்படுவது ஒரு சட்டப் பிரச்சினை மட்டும் அல்ல. அது ஓர் அரசியல் பிரச்சினை. குறிப்பாக நிலைமாறு கால நீதியின் கீழ் கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக நினைவு கூர்தலுக்கான உரிமை தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. நிலைமாறு கால நீதியின் நான்கு தூண்களில் ஒன்றாகிய இழப்பீடு என்ற பகுதிக்குள் அது வருகிறது. ஒரு மக்கள் கூட்டம் யாரையும் நினைவு கூரும் உரிமையை இழப்பீட்டு நீதி ஏற்றுக் கொள்கிறது பாதுகாக்கின்றது. இந்த அடிப்படையில்தான் கடந்த ஆண்டுகளில் நினைவு கூர்தல் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. ஆனால் இம்முறை ராஜபக்சக்கள் நினைவு கூர்தலுக்கான வெளியை முற்றாக அடைக்கப் போகிறார்களா? அப்படி அவர்கள் அடைப்பார்களாக இருந்தால் அது இலங்கைத் தீவில் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வந்த நிலைமாறுகால நீதிச் செயல்பாடுகளை செங்குத்தாக முறிப்பதாக அமையும். நிலைமாறு கால நீதி என்பது உள்நாட்டு நீதி போதாது என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட ஓர் அனைத்துலக நீதி தான். உள்நாட்டு நீதி போதும் என்றால்˙ உள்நாட்டு நீதியை இலங்கைத் தீவில் எல்லா சமூகங்களும் ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலைமை இருந்திருந்தால் ஏன் ஐ.நா. நிலைமாறுகால நீதி யைப் பரிந்துரைக்க வேண்டும்?

எனவே நிலைமாறு கால நீதியின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளாக நினைவு கூர்தலை முன்னெடுத்த ஓர் அனுபவம் எனப்படுவது இலங்கைத் தீவின் நீதி பரிபாலன கட்டமைப்புக்கு வெளியே அதை ஓர் அரசியல் பிரச்சினையாக அணுக வேண்டும் என்பதைத்தான் காட்டுகின்றது. நினைவு கூர்தலுக்கான உரிமை எனப்படுவது ஒரு பண்பாட்டு உரிமை. அது ஒரு கூட்டு உரிமை. எனவே அரசியல் உரிமையும் கூட.

எனவே நினைவு கூர்தலுக்கான உரிமையை ஓர் அரசியல் விவகாரமாகவே அணுக வேண்டும். அதை சட்ட விவகாரமாக அணுகக் கூடாது. தொடக்கத்திலிருந்தே அதை சட்ட விவகாரமாக அணுகியது ஒரு செய்முறைத் தவறு. தமிழ் கட்சிகளில் முதன்மை உறுப்பினர்கள் சட்டவாளர்கள் ஆக இருப்பதனால் அவர்கள் தங்களுக்கு தெரிந்த ஒழுக்கத்துக்கு ஊடாக அதை அப்படி அணுகினார்களோ தெரியாது. ஆனால் ஒரு அரசியல் விவகாரத்தை சட்ட விவகாரமாக அணுகிய பின் இப்பொழுது அதை எப்படி ஓர் அரசியல் விவகாரமாக ஒரு போராட்டமாக முன்னெடுப்பது என்ற கேள்வி எழுகிறது.

இந்த கேள்வியின் அடிப்படையில் பார்த்தால் தமிழ் கட்சிகள் இணைந்து ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியது சரியா என்ற கேள்வியும் எழுகிறது. அப்படி என்றால் என்ன செய்திருக்க வேண்டும்?

ஆம் இந்தக் கேள்வி தான் முக்கியம். தமது கூட்டு உரிமையை வென்றெடுப்பதற்கான அரசியல் போராட்டங்களை புதிய வெகுசன எழுச்சிகளை அவர்கள் முன்னெடுத்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் தமிழ் பிரதிநிதிகள் தங்களால் இயன்ற எதிர்ப்பை பொது வெளியில் காட்டி இருந்திருக்க வேண்டும் நாடாளுமன்றத்துக்கு முன்னாலும் அல்லது மக்கள் கூடும் இடங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளிட்ட தமிழ் அரசியல் பிரமுகர்கள் இது விடயத்தில் தமது எதிர்ப்பை ஒற்றுமையாக வெளிக்காட்டி இருக்கலாம்.

அரசியல் உரிமைக்கான போராட்டம் எனப்படுவது ஒருவிதத்தில் சட்டமறுப்புத்தான். சட்டமறுப்பு எனப்படுவது சட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் போராடி சிறை போவதுதான். இந்தியாவில் காந்தியின் தலைமையில் அவ்வாறுதான் சட்டமறுப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றை சிறை நிறப்பு போராட்டங்கள் என்றும் அழைப்பது உண்டு. உலகம் முழுவதிலும் சமூக இயக்கங்களும் அரசியல் செயற்பாட்டு இயக்கங்களும் கட்சிகளும் அவ்வாறுதான் தமது எதிர்ப்பைக் காட்டி வருகின்றன.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் நினைவு கூர்தலுக்கான தமது உரிமையை வென்றெடுப்பதற்காக தமிழ் கட்சிகள் அதை ஒரு அரசியல் விவகாரமாக போராட வேண்டுமா அல்லது சட்ட விவகாரமாக சுருக்கி நீதி கேட்க வேண்டுமா? எது சரி? அதை ஒரு சட்ட பிரச்சினையாக அணுகுவது தமது கட்சிகளுக்கு இலகுவானது. பெருமளவுக்கு சட்டவாளர்கள் அரசியல்வாதிகளாக காணப்படும் ஒரு சூழலில் அதை ஒரு சட்டப் பிரச்சினை ஆகவே அவர்கள் கையாள முற்படுவார்கள். மாறாக அதை ஒரு சட்ட மறுப்பாக சிறை நிரப்பும் போராட்டமாக முன்னெடுக்க தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் தயார்? இது விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் ரிஸ்க் எடுத்து தமது சௌகரிய வலையத்தை விட்டு வெளியே வந்து போராட வேண்டிய தேவை இருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவ்வாறு அர்ப்பணித்துப் போராடத் தயாராக இருந்த தலைவர்கள் எத்தனை பேர்?

பல மாதங்களுக்கு முன்பு சிறைக் கைதிகளுக்கான போராட்டம் தொடர்பான ஒரு உரையாடலின் போது இவ்வாறு படைப்புத்திறன் மிக்க அறவழிப் போராட்டங்களைக் குறித்து சிந்திக்க வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்பட்டது. அப்பொழுது ஒரு புதிய படைப்புத்திறன் மிக்க ஒரு செய்முறை சுட்டிக் காட்டப்பட்டது. அதன்படி தமிழ் நகரங்களின் மையங்களில் சிறை கூண்டை போன்ற ஒன்றைச் செய்து அதற்குள் ஒவ்வொரு நாளும் ஒரு தமிழ் அரசியல் பிரமுகர் சிறைக் கைதிகளுக்கு உரிய ஆடைகளோடு நாள் முழுதும் உள்ளே இருக்க வேண்டும். இப்படியாக தமிழ் நகரங்களிலும் தலைநகரத்தில் கொழும்பிலும் செய்யலாம். இது ஊடகங்களின் கவனத்தையும் ஈர்க்கும் சொந்த மக்கள் மத்தியிலும் கொதிப்பை ஏற்படுத்தும்˙ அனைத்துலக அளவிலும் கவனத்தை ஈர்க்கும். சிறைக் கைதிகளுக்காக இவ்வாறு போராடுவதற்கு எத்தனை அரசியல்வாதிகள் தயார்? இப்பொழுது நினைவு கூர்தலுக்கான கூட்டு உரிமைகள் தொடர்பிலும் அவ்வாறு ஒரு புதிய அறவழிப் போராட்ட முறைமை குறித்து சிந்திக்க வேண்டி இருக்கிறதா? அறவழிப் போராட்டம் எனப்படுவது அதுதான். அறவழிப் போராட்டம் எனப்படுவது குறியீட்டு வகைப்பட்ட உண்ணாவிரதமோ அல்லது சில மணி நேர கவன ஈர்ப்போ அல்லது ஒருநாள் எழுக தமிழ் எழுச்சியோ மட்டும் அல்ல. அதற்கும் அப்பால் அது ஆழமானது தொடர்ச்சியானது உக்கிரமானது. அப்படிப்பட்ட அறவழிப் போராட்டத்தை குறித்த தரிசனங்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில் தான் இவ்வாறு கடிதம் எழுதும் ஒரு நிலைமை வருகிறதா ? அவ்வாறு அறவழிப் போராட்டங்களை குறித்த தரிசனங்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில் தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆயிரத்தி முந்நூறு நாட்களைக் கடந்தும் போராடும் ஒரு நிலைமை காணப்படுகிறதா?

எனவே தமிழ் அரசியல்வாதிகள் முதலில் செய்ய வேண்டியது பொருத்தமான ஒரு அறவழிப் போராட்டத்தை முன்னெடுப்பதுதான். அதற்குரிய பொருத்தமான உரையாடல்களில்ஈடுபட்டு முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைக்கும் பொருத்தமான படைப்புத்திறன் மிக்க அறவழிப் போராட்டம் ஒன்றை கண்டுபிடிப்பதுதான். அவர்கள் ஐக்கியப்பட்டு முதலில் செய்ய வேண்டியது அதைத்தான். இது விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள்˙ கருத்துருவாக்கிகள்˙ செயற்பாட்டாளர்கள் மதத்தலைவர்கள்˙ படைப்பாளிகள்˙ ஊடகவியலாளர்கள் போன்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தமிழ் மக்களுக்கு இப்போது தேவையாக இருப்பது ஒரு புதிய படைப்புத்திறன் மிக்க அறவழிப் போராட்டம் தான்.



# கனேடியர்களாகிய நாங்கள் எத்தகையோர் என்பதை நினைவுபடுத்துவதற்கான நேரமே இந்த கொரோனாக் காலம்..



## அரசின் சிம்மாசன உரையில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வலியுறுத்து

கனேடியர்களாகிய நாங்கள் எத்தகையோர் என்பதை நினைவுபடுத்துவதற்கான நேரம் இது. மேலும் உலகளாவிய நெருக்கடியைக் கட்டுப்படுத்தி, மீண்டும் சிறப்பாகக் எமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக இந்த நெருக்கடியான காலம் எமக்கு அமைகிறது.

இவ்வாறு கனடியப் பிரதமர் கௌரவ ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் நேற்றைய தினம், கனேடிய நாடாளுமன்றத்தின் மக்களவை புதிய கூட்டத் தொடரை முன்னிட்டு கூடியபோது, கனேடிய அரசின் சார்பான சிம்மாசன உரையை ஆற்றியபோது வலியுறுத்திப் பேசினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "உலகத் தொற்றுநோய் கனடா இதுவரை எதிர்கொண்ட மிக மோசமான பொதுச் சுகாதார நெருக்கடியாக விளங்குகிறது. எமது சமூகத்திலும், உலகம் முழுவதிலும் உள்ள சமூகங்களிலும் நிலவும் அடிப்படை இடைவெளிகளைக் கடந்த ஆறு மாதங்கள் வெளிக்காட்டியுள்ளன. பெற்றோர், இனப்பிரிவுகளைச் சேர்ந்த கனேடியர்கள், பூர்வ குடிமக்கட்குழுக்கள், இளைய கனேடியர்கள், முதியோர் போன்ற, ஏற்கனவே சிரமங்களை எதிர்கொண்டிருந்தவர்களின் நிலைமை உலகத்தொற்று நோயால் மேலும் மோசமடைந்துள்ளது. அனைவருக்குமாக நெகிழ் திறன்மிக்கதாகக் கனடாவைக் கட்டியெழுப்புவதற்குச் சுகாதாரம், பொருளாதாரம், சமத்துவம், சுற்றுச்சூழல் என்பன தொடர்பாகத் துணிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கனேடியர்களான நாம் எத்தகையோர் என்பதை நினைவுபடுத்துவதற்கான நேரம் இது. உலகளாவிய நெருக்கடியைக் கட்டுப்படுத்தி, மீண்டும் சிறப்பாகக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக இது அமைகிறது.

சிம்மாசன உரையில் கனடாவை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான நான்கு அடித்தளங்கள் குறிப்பிடப்பட்டன.

(1) கனேடியர்களைக் கோவிட்-19 இல் இருந்து பாதுகாத்தல்:
இந்தத் திட்டத்தின் முதல் அடித்தளம், கனேடியர்களைப் பாதுகாப்பதற்கு எம்மால் இயன்ற அனைத்தையும் செய்து, உலகத்தொற்று நோய்க்கு எதிராகப் போராடுவதும் உயிர்களைக் காப்பதுமாகும். அனைத்துக் கனேடியர்களையும் - முக்கியமாக எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களை - பாதுகாப்பதே எமது முக்கியநோக்கம்.
சமஷ்டி அரசு

- மாகாணங்கள் பரிசோதனை அளவை அதிகரிப்பதற்கு உதவியளிக்கும்
- கனடாவில் பரிசோதனைகள் அங்கீகரிக்கப்பட்டதும், அவற்றைச் செயற்படுத்த அதனால் இயன்ற அனைத்தையும் செய்யும்.
- பரிசோதனைகளின் எண்ணிக்கைகளை விரைவாக அதிகரிப்பதற்கான தேவை ஏற்பட்டால் உதவிபுரிவதற்காக சமஷ்டி பரிசோதனை உதவி நடவடிக்கை அணியொன்றை உருவாக்கும்.
- தடுப்பு மருந்தொன்று தயாராகியதும் அதைக் கனேடியர்கள் பெறுவதை உறுதி செய்யும்.

(2) உலகத் தொற்று நோயின்போது கனேடியர்களுக்கு உதவியளித்தல்:
எமது திட்டத்தின் இரண்டாவது அடித்தளம், இந்த நெருக்கடி எந்த அளவு காலத்திற்கு நீடித்தாலும், அந்தக் காலப்பகுதி முழுவதும் கனேடியர்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் ஆதரவளிப்பது.
இது சிக்கன நடவடிக்கைக்கான நேரம் அல்ல. இந்தச் சுகாதார நெருக்கடியின்போது கனேடியர்களுக்கு ஆதரவு கிடைப்பதை உறுதி செய்வதே பொருளாதாரத்திற்கு நாம் செய்யக்கூடிய சிறந்த விடயம். கனேடியர்கள் உடல் நலமா அல்லது தொழிலா என்ற தெரிவை மேற்கொள்ள வேண்டிய நிலை இருக்கக்கூடாது. இவ்வாறே, அரசால் இலகுவாகத் தாங்கக்கூடிய கடன்களைக் கனேடியர்கள் பெறவேண்டிய தேவையும் இருக்கக்கூடாது.
கனேடியர்களின் வாழ்வாதாரத்திற்கும், வணிக நிறுவனங்கள் செயற்படுவதற்கும், வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதற்கும், பொருளாதாரத்தில் பங்கெடுக்கும் பெண்களுக்கு ஆதரவளிப்பதற்கும், எமது நிதி நிலை சமாளிக்கக்கூடியதாக இருப்பதை உறுதி செய்வதற்கும் நாம் உதவியளிப்போம்.
இந்தத்திட்டத்தில்:

- ஒரு மில்லியனுக்கும் அதிகமான வேலை வாய்ப்புக்கள் உருவாக்குதல்
- கனடா அவசர சம்பளமானியத்தை எதிர்வரும் கோடைகாலம் வரை நீடித்தல்
- பயிற்சி, ஆட்சேர்ப்பு, பணியில் இருப்போரைத் தொடர்ந்து வைத்திருத்தல் போன்றவற்றில் நேரடியான முதலீடுகளும்,
- இளைய கனேடியர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதும்
- நிலைமாறு வேலைக் காப்புறுதித் திட்டம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் பணியாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் உதவியளிப்பது
- பாரம்பரியமாக வேலைக் காப்புறுதிக்குத் தகுதிபெறாத தொழிலாளர்களையும் உள்ளடக்கிப் புதிய வேலைக் காப்புறுதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல்
- உலகத் தொற்றுநோய், அதிலிருந்து மீளுதல் ஆகியவற்றில் பெண் நிலைநோக்கில் இருந்து செயற்படுவதை உறுதி செய்வதற்காகப் பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய செயலணி ஒன்றின் வழிகாட்டலில் பொருளாதாரத்தில் பங்கெடுக்கும் பெண்களுக்கான செயற்திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதிகளவு பெண்கள் பணியணியில் மீள இணைவதற்கு உதவியளித்தல்
- கனடா தழுவிய ஆரம்பகால கல்வி மற்றும் சிறுவர் பராமரிப்புப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதன் மூலம் செலவு குறைந்ததும், விரிவானதும், உயர்தரமானதுமான சிறுவர் பராமரிப்பு வசதியைப் பெற்றோருக்கு வழங்குதல்

(3) மேலும் சிறப்பாக மீளக்கட்டியெழுப்புதல் - நடுத்தர வகுப்பினருக்கான மீளமைவுத் திட்டம்
இந்தத்திட்டத்தின் மூன்றாவது அடித்தளம், முன்னரிலும் பலமானதும், பழைய நிலைக்குத் திரும்பக்கூடியதுமாகக் கனடாவை மேலும் சிறப்பாக மீளக்கட்டியெழுப்புதல் - நடுத்தர வகுப்பினரைப் பலப்படுத்துவதும், கடின உழைப்பாளிகள் அதில் இணைவதற்கு உதவுவதும், எமது சமூகப் பொறிமுறைகளில் நிலவும் இடைவெளிகள் குறித்து நடவடிக்கை எடுப்பதும், சுகாதாரப் பராமரிப்பில் முதலிடுவதும், பலமான பணி அணி (workforce) ஒன்றை உருவாக்குதலும்.
எமதுஅரசு:

- முதியோருக்கு மிகச்சிறந்த ஆதரவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக நீண்டகாலப் பராமரிப்புத் தொடர்பான புதிய, தேசிய தராதரங்களை வரையறை செய்வதற்கு மாகாணங்களுடனும், பிராந்தியங்களுடனும் இணைந்து பணியாற்றும்.
- தமது பராமரிப்பில் இருக்கும் முதியோரைக் கவனிக்காதிருப்போரைத் தண்டிப்பதற்குக் குற்றவியல் சட்டத்தில் மாற்றம் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும்.
- முதியவர் ஒருவர் 75 வயதை அடையும்போது Old Age Security கொடுப்பனவை அதிகரிப்பதுடன், Canada Pension Plan survivor's benefit ஐயும்அதிகரிக்கும்.
- Disability Inclusion Plan ஒன்றை உருவாக்குதல் இந்தத்திட்டத்தில்
- முதியோருக்கான Guaranteed Income Supplement ஐப் பின்பற்றி உருவாக்கப்படும் புதிய Canadian Disability Benefitஒன்றும்
- மாற்றுவலுவுள்ள கனேடியர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் உறுதியான வேலைவாய்ப்பு மூலோபாயமும்
- மாற்று வலுவுள்ளோருக்கான அரசின் திட்டங்களுக்கும், உதவிகளுக்கும் தகுதியானோரைத் தெரிவு செய்வதற்கான மேம்பட்ட பொறிமுறையும் அடங்கியிருக்கும்.
- தூய்மையான வளர்ச்சியின் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடுவதுடன், நீண்டகால நோக்கில் போட்டியிடும் வல்லமையுள்ள பொருளாதாரத்தை உருவாக்கும்.
- கனடாவின் 2030 ஆம் ஆண்டுக்கான காலநிலை மாற்ற இலக்கைவிட மேம்பட்ட நிலையை அடைவதற்கான திட்டத்தை உடனடியாக வெளியிடும்.
- 2050 ஆம் ஆண்டிற்கு முன்பாக நிகர மாசுவாயுக்களின் வெளியேற்றத்தைப் பூச்சியமாகக் குறைக்கும் கனடாவின் இலக்குக்குச் சட்ட வடிவம் கொடுக்கும்.
- மீள் புதுப்பிக்கும் சக்தி, அடுத்த தலைமுறைத் தூய்மைச்சக்தி மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள் என்பவற்றில் முதலீடுகளை ஆதரிக்கும்.

(4) எத்தகைய கனடாவுக்காக நாம் போராடுகிறோம்:
இந்தத் திட்டத்தின் நான்காவது அடித்தளம் கனேடியர்களுக்காகக் குரல்கொடுப்பதும், எமது விழுமியங்களைப் பாதுகாப்பதுமாகும். கனடாவில் நாம் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருப்போம்.
பால் சமத்துவத்தை ஏற்படுத்துதல், மீளிணக்கத்தை நோக்கிய பயணம், கட்டமைப்பு அடிப்படையிலான இனவாதத்தை எதிர்கொள்ளல் போன்றவற்றில் முன்னேற்றத்தை எட்டுவதற்கு நாம் இணைந்து மேலும் செயலாற்ற வேண்டியுள்ளது. இரண்டு உத்தியோகபூர்வ மொழிகளையும் அரவணைத்தல், மாறுபட்ட பாலுறவுத்தெரிவாளர் சமூகங்களின் (LGBTQ2) பங்களிப்பைக் கொண்டாடுதல், புதிதாக நாட்டுக்கு வருவோரை வரவேற்பது, குடும்ப மீளிணைவை ஆதரிப்பது போன்ற, எமது நாட்டுக்கு மதிப்பளிக்கும் விடயங்களை நாம் பாதுகாப்போம்.
கனேடியர்கள் முன்னரும் நிச்சமற்ற நிலைமைகளை எதிர்கொண்டபோதிலும், உறுதி, ஏனையோர்மீதான அக்கறை, துணிவு என்பவற்றால் அந்தச் சவால்களை வென்றார்கள். எமது நாட்டில் பொதுஅறிவு அணுகுமுறை நிலவுகிறது.
இந்தப் பண்புகள் அனைத்தையும் நாம் மீண்டும் பயன்படுத்துவதுடன், பொது நலனுக்காகவும், மேம்பட்டதும், பாதுகாப்பானதும், நீதியானதுமான சமூகத்துக்காகவும் தொடர்ந்து உழைக்கவேண்டும்.
இவையே எம்மை வரையறை செய்கின்றன. இவையே பிரகாசமான எதிர்காலத்திற்கு எம்மைக் கொண்டு செல்லும்.

இந்த சிம்மாசன உரை தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின பின்வரும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
மேலதிக தகவல்களுக்கும், ஊடகங்களின் கேள்விகளுக்கும்:
டொறீன்சவுந்தரநாயகம்
Gary.Anandasangaree.C1A@parl.gc.ca



# கனடா ஒன்ராறியோ மாகாணத்தில் 60க்கு மேற்பட்ட மருந்தகங்களில் கொவிட் -19 நோய்க்கான பரிசோதனைகளை மேற்கொள்ளலாம்.

**- மாகாண அரசு அறிவித்தது**



எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல், ஒன்ராறியோவில் உள்ள 60 வரையான மருந்தகங்களில் கொவிட்-19 நோய்க்கான அறிகுறிகள் இல்லாதோர் முன்பதிவுமுறை மூலம் பரிசோதனைகளை மேற்கொள்ளலாம். எதிர்வரும் வாரங்களில் மேலும் பல இடங்கள் அறிவிக்கப்படும். இவை மாகாணத்தில் தற்போதுல உள்ள 150 மதிப்பீட்டு மையங்களைவிட மேலதிகமானவையாகும்.

மருந்தகத்திற்குச் செல்லும்போது அனைவரும் முகக்கவசம் அணிதல், அடிக்கடி கை கழுவுதல், தங்கள் வீடு அல்லது சமுக வட்டத்துக்கு வெளியே உள்ளவர்களிடமிருந்து சமுக இடைவெளியைப் பேணுதல் போன்ற கொவிட்-19 தொடர்பான பொது சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

கொவிட்-19 சோதனையை மருந்தகங்களுக்கு விரிவாக்குவது என்பது கொவிட்-19 நோய்த்தொற்றின் இரண்டாம் பரம்பலை மானிலம் எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல் திட்டமாகும்.

ஒன்ராறியோவை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான சில வழிமுறைகளில், கொவிட்-19 இன் எதிர்கால நோய்ப் பரம்பல்களை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல், சமுகங்களைப் பாதுகாப்பதற்கு நோய்த்தொற்றை உடனே அடையாளம் காண்டு அதனை தடுப்பதுடன் விரைந்து செயற்படுதல் போன்றவை அடங்கும்.

விஜய் தணிகாசலம், ஸ்காபரோ-றூஜ் பார்க்.மாகாண சட்டமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். - நன்றி.



# மனதை வருத்தும் ஒரு செய்தி... மக்கள் சேவகன் ஜிம் கரிஜியானிஸ் மூன்றாவது தடவையாகவும் கவுன்சிலர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்

25வருட காலங்கள் உன்னத சேவையாற்றிய ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் லிபரல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி. அதனைத் தொடர்ந்து நகரசபைக் கவுன்சிலர் பதவி சற்று பொறுப்புக்கள் குறைந்த பதவியானாலும் அதிலும் மனம் நிறைந்த திருப்தியுடன் ஆண்டுகள் பல ஆற்றிய பணிகள்.

இவ்வாறாக அரசியல் பதவிகளில் பிரகாசித்தாலும் மக்கள் சேவைகளை விட்டு எப்போது விலகி நிற்காக பெருமகன் ஜிம் கரிஜியானிஸ் மீண்டும் தனது நகரசபை உறுப்பினர் பதவியிலிருந்து "தூக்கி" எறியப்பட்டுள்ளார் என்ற மிகுந்த வேதனை தரும் செய்யை இங்கு பதிவு செய்வதற்கு விரல்கள் கூட ஒத்துழைக்காமல் தடுமாறுகின்றோம்.

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஊழலோ அன்றி பதவியை துஸ்பிரயோகம் செய்மையோ அல்ல. தனது தேர்தல் பிரச்சாரச் செலவுகளை அரசாங்கம் நிர்ணயித்த தொகைக்கு சற்று அதிகமாகச் செய்து விட்டாராம்.

இலங்கை இந்தியா ஆகிய நாடுகளில் அரசியல் பதவிகள் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்தும் பரம்பரைகளுக்கு சொத்துச் சேர்ப்பதில் தொடர்ந்து கண்ணாக இருப்பதில் கவனம் கொண்ட தலைவர்கள் சிரித்தபடி உள்ளார்கள்.

ஆனால் இந்த சேவைத்திருமகளுக்கு இவ்வளவு மோசனமான தண்டையை வழங்கி, அவரை ஒரு சேவையாற்றும் தளத்தில் தொடர்ந்து பணியாற்றுவதற்கு தடை வீதித்துள்ளார்கள். இதை ஒரு அரசியல் ச தியாக பலர் பார்க்கின்றனர்.

கவுன்சிலர் ஜிம் கரிஜியானிஸ் அவர்கள் தனி நபர் ஒருவரால் தொடரப்பட்ட வழக்கு ஒன்றின் மூலமே முதலில் பதவியை இழந்தார். பின்னர் அவர் ஒன்றாரியோ மாகாண உயர் நீதிமன்றத்தில் தனக்கெதிரான தீர்ப்பை நிராகரித்து அப்பீல் வழக்குத் தொடர்ந்தார்.

அங்கு அவருக்கு சார்பான தீர்ப்பு வழங்கப் பெற்று மீண்டும் ரொரன்ரோ மாநகர சபையின் கவன்சிலராக பதவியேற்றார். தொடர்ந்து அவர் சில வாரங்கள் பணியாற்றும் போது திடீரென ஒன்றாரியோ மாகாண உயர் நீதி மன்றம் இவரை கவன்சிலர் பதவியிலிருந்து இடை நிறுத்தும் படி மாநகரசபைக்கு அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து கவன்சிலர் ஜிம் கரிஜியானிஸ் அவர்கள் கனடாவின் மத்திய உ யர் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்தார். ஆனால் அவரது வழக்கை விசாரணைக்கு எடுக்காமலே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள கவுன்சிலர் ஜிம் கரிஸ ியானிஸ் அவர்கள் மீண்டும் அப்பீல் செய்ய முடியாத அளவிற்கு சட்டத்தில் இறுக்கங்கள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த பதவியிழப்பு தொடர்பான கவுன்சிலர் ஜிம் கரிஜியானிஸ் அவர்கள் தனது இணையத்தளத்தில் இன்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"கனடாவில் 32 வருட காலமாக பாராளுமன்ற உறுப்பினராகவும் தொடர்ந்து நகரசபை கவுன்சிலராகவும் சேவையாற்றிய நான் அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்க வேண்டிய நேரம் வந்துள்ளது.

ஸ்காபுறோ அஜின்கோர்ட் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு சேவையாற்றக் கிடைத்த நீண்ட கால சந்தர்ப்பத்தைத நான் பெருமையாகவே கருதுகின்றேன். இந்த தொகுதியிலும் வட்டாரத்திலும் வாழும் மக்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் என்மீது காட்டிய ஆதரவிற்கும் அன்பிற்கும் நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாம் அறிந்த வகையில் ரொரன்ரோ பெரும்பாகத்தில் வாழும் ஆயிரக்கணக்கானவர்கள் அவரின் அற்புதமான சேவையினால் பலன் பெற்றவர்கள் ஆவார்கள். எனவே கவுன்சிலர் ஜிம் கரிஜியானிஸ் அவர்களின் சேவையினால் பலனடைந்தவர்களோடு நாமும் இணைந்து அவருக்கு பிரியாவிடை அளிப்போமாக!







HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Fasting made Tempting
with Special Thali
for Purtassi
புரட்டாசி மாத விரதச் சாப்பாடு கிடைக்கும்
19 Sept | 26 Sept | 3 Oct | 10 Oct
saravanaacanada
@SaravanaaBhavanCanada
www.saravanabhavan.ca
Mississauga
Hurontario and Eglinton Intersection, 4559 Hurontario Street, Unit 12B, Mississauga, ON. L4Z3L9
T: 905 290 0769
Scarborough
Woodside Square, Finch & McCowan Intersection. 1571 Sandhurst Circle, Unit 153, Scarborough, ON. M1V 1V2
T: 416 293 7755

# சிறுவனின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட செல்போன்

செல்போன் திருட்டில் ஈடுபட்ட சிறார் குற்றவாளியைத் திருத்தி கல்வியில் ஈடுபட வைக்கும் நோக்கில் அவருக்கு செல்போன் ஒன்றைப் பரிசளித்துள்ளனர் வட சென்னை காவல்துறையினர்.

அப்படியான ஒரு முன்னெடுப்பை காவல்துறையின் இரு பெண் அதிகாரிகள் விளம்பரமில்லாமல் செய்துள்ளனர்.



வட சென்னை என்றாலே அச்சமூட்டும் ஒரு பகுதி என்று திரைப்படங்கள் மக்களிடையே ஒரு கருத்தை ஏற்படுத்தியுள்ளன. அந்தப் பகுதி சமூக விரோதிகளின் கூடாரம், மாநகரில் நடக்கும் அனைத்து குற்றச் செயல்களுக்கு அப்பகுதியே காரணம் என்பது பகுதியளவில் உண்மை.

அதே வடசென்னையில் தான் ஒரு நூற்றாண்டுக்கும் முன்னர் இங்கு வியாபார நிமித்தமாக வந்து நிரந்தரமாகக் குடியேறி தமது வாழ்வாதாரத்தையும், நகரத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கும் பங்களித்த வடநாட்டு மக்களும் வாழ்கின்றனர்.

சமூக ஏற்றத் தாழ்வுகளை வட சென்னையின் ஒரு அங்கம். இதன் காரணமாகத் தமிழகத்தின் இதர பகுதிகளைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் வட சென்னையில் கல்வியறிவு சற்றுக் குறைவாக உள்ளது. சமூகத்தில் பின் தங்கிய பல குடும்பங்களில் பிள்ளைகளில் ஏராளமானோர் மிகுந்த சிரமங்களுக்கு இடையே பள்ளிப் படிப்பை முடிக்கின்றனர். பத்தாம் வகுப்புக்குப் பிறகு பல பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வது குறைவாக உள்ளது.

இந்த நிலையை மாற்ற அரசு பல முனைப்புகளைச் செய்கிறது. மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தி கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி அதில் சிறார்களை முழுமையாக ஈடுபட வைப்பதில் வட சென்னை காவல்துறையின் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.

அங்குள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை அடிக்கடி சந்தித்து அவர்களுக்குக் கல்வி விளையாட்டு மற்றும் நற்பண்புகளின் முக்கியத்துவத்தை இணை ஆணையர் பாலகிருஷ்ணன் தலைமையிலான காவல்துறையினர் முன்னெடுத்து வருகின்றனர்.



கொரோனா தொற்றுக் காரணமாக பாடசாலைகள் இன்னும் திறக்கப்படாமல் தற்போது மாணவர்கள் இணைய வகுப்புகள் வாயிலாகவே பாடங்களை கற்று வருகின்றனர்.

எனினும் வட சென்னை போன்று பின் தங்கிய பகுதிகளில் மாணவர்கள் இணையம் மூலம் பாடங்களை கவனிக்க ஸ்மார்ட் போன் தேவைப்படுகிறது. ஆனால் தனது உழைப்பின் பெரும் பகுதியில் குடியில் கரைத்த ஒரு நபரால் தனது மகனுக்கு அப்படியான தொலைபேசியை வாங்கிக் கொடுக்க முடியவில்லை.

இதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்ற திருடன் ஒருவன் வட சென்னையிலுள்ள மாநகராட்சி இடைநிலைப் பள்ளியில் படிக்கும் 13 வயது மாணவர் ஒருவனை தனது திருட்டுக்கு உடந்தையாக இருக்கும்படி ஆசைகாட்டி அதற்கு இணங்க வைத்துள்ளான்.

சாலைகளில் செல்வோரிடம் செல்போன் பறிப்புக்கு இந்தச் சிறுவன் உதவினால் அவனுக்கு ஆன்லைன் மூலம் பாடங்களை கவனிக்க ஒரு செல்போன் கிடைக்கும் என்று கூறி வழிப்பறியில் ஈடுபட்டனர். அப்படி ஒருவரிடமிருந்து செல்ஃபோனைப் பறித்து ஓடும் முச்சக்கர வாகனத்தில் தப்பிக்க முயன்ற போது இந்தச் சிறுவனை மட்டுமே அந்த நபரால் மடக்கிப் பிடிக்க முடிந்தது.

சிறுவனிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவனது குடும்பச் சூழல் வெளிப்பட்டது. தந்தையின் குடிப்பழக்கத்தால் பிள்ளையின் படிப்பு பாழாவதைக் கண்ட திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் திருமதி புவனேஸ்வரி அந்த மாணவரின் கல்வி தடைப்படக் கூடாது என்று எண்ணினார்.



இந்த விஷயம் வட சென்னைப் பகுதி துணை ஆணையர் திருமதி சுப்புலட்சுமியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அவர் உடனடியாக அந்த மாணவரை அழைத்து விசாரித்தார். அந்த மாணவரிடம் "உங்களுக்கு ஸ்மார்ட் போன் கிடைத்தால் படிப்பில் கவனம் செலுத்துவீர்களா?" என்று கேட்டபோது "நிச்சயமாக" என்று பதில் வந்தது. மாணவரது பதில் அந்த இரண்டு பெண் அதிகாரிகளுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

இதையடுத்து உடனடியாக தனது சொந்த செலவில் அந்த மாணவருக்கு ஸ்மார்ட் போன் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார் திருவொற்றியூர் ஆய்வாளர் திருமதி புவனேஸ்வரி. சிறார் சீர்திருத்த நிகழ்வொன்றில் இந்த அன்பளிப்பு அந்த மாணவருக்கு வழங்கப்பட்டது.

அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுத் திறன் மேம்பட காவல்துறை அனைத்து உதவிகளையும் வழங்கும் என்கிறார் வட சென்னைப் பகுதியின் இணை ஆணையர் பாலகிரு'ணன்.


காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: 416.918.9771
Business: 416.321.2500

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance

Are you getting Million Dollar advice?

# GWC
## Gibson Wellness Centre

**வாகன விபத்தில் கடுமையாக காயம் அடைந்தீர்களா?**

We specialize in serious and catastrophic injuries.

**உங்கள் காப்புறுதி நிறுவனத்திலிருந்து உங்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை**

**$100,000** வரை வட்டியில்லாத கடனாக பெற்றுக்கொள்ள எங்களை அழையுங்கள்.

CALL NOW TO RECEIVE UP TO $100,000 IN INTEREST-FREE LOANS

to assist with your financial needs until you receive a settlement from your insurance company

If top-notch service is your wish, don't wait, call Thavem Krish



# டரன் கிருபா
கனேடிய தமிழ் சட்டத்தரணி

Darren Kirupa, J.D.
Barrister & Solicitor

**416.904.9118**


7130 WARDEN AVE, SUITE 606
MARKHAM, ON. L3R 1S2


Amma Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!
Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma Apple Cider with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471
Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml
Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# பாடசாலைகளைப் பாதுகாப்பாக மீண்டும் திறப்பது அனைவருக்கும் முக்கியமானது

**அதற்காகவே** பிள்ளைகளையும் ஊழியர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஏற்ற முறையில் ஒரு விரிவான திட்டத்தை உருவாக்குவதற்கு, ஒன்ராறியோ அரசாங்கமானது சுகாதார அதிகாரிகள், பாடசாலைச் சபைகள் மற்றும் கல்வியாளர்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

- மேசைகளுக்கிடையில் அதிக தூரம் விடுதல், குறியீடுகளையும், தரை அடையாளங்களையும் இடுதல் மற்றும் ஒரு-வழிச் சிறுபாதைகள் போன்ற **உடல் ரீதியாகத் தூரப்படுத்தும்** நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.
- 4-12 வகுப்புகளில் உள்ள ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் **முகக் கவசங்கள் பாவிப்பது** அவசியமாக்கப்படும்.
- கை சுத்திகரிப்பு மற்றும் கை கழுவுதல் மூலம் **கைச் சுகாதாரம்** செயற்படுத்தப்படும்.
- **மேலதிகமான தாதியர்**கள் பாடசாலைகளில் இருப்பார்கள்.
- **பாடசாலையின் சுத்தம்** மேம்படுத்தப்படும்.



மேலும் அறிய **ontario.ca/ReopeningSchools** ஐப் பார்வையிடவும்.
இதற்குரிய கட்டணம் ஒன்ராறியோ அரசாங்கத்தால் செலுத்தப்பட்டுள்ளது

Ontario

LEASE TO OWN



$58.88 WEEKLY +TAX

2020 COROLLA L CVT

1.69% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

LEASE TO OWN



$88 WEEKLY +TAX

2020 RAV-4 LE FWD

4.99% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

USED CARS

COROLLA - 10 IN STOCK
From $10,600 + tax - 2012 & up

CAMRY - 10 IN STOCK
From $17,700 + tax - 2015 & up

RAV-4 - 15 IN STOCK
From $14,500 + tax - 2012 & up

SIENNA - 5 IN STOCK
From $30,363 + tax - 2017 & up

USED VEHICLES

HONDA LEXUS LAND ROVER

YORKDALE TOYOTA

3080 Dufferin Street
Toronto, ON M6A 2S6

Dufferin & Lawrence

www.yorkdaletoyota.com

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

2021 Venza Hybrid is at the Showroom



Book for Test Drive

FOR TONY SIVA'S CLIENTS!!!

FREE Winter Tires



with every purchase of New or Used Vehicle

$0 DOWN on New or Used Vehicles

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்



Tony Siva

647-269-0749 tonymidtown@hotmail.com

www.yorkdaletoyota.com


# கூகிள் டூடில் கௌரவித்த இந்திய நீச்சல் பெண்மணி

தெற்காசியாவில் இன்றைய தலைமுறையினர் பலர் ஆர்த்தி சாஹாவைப் பற்றி அறிந்திருக்கமாட்டார்கள் அல்லது அவர்களுக்கு அவரைப் பற்றி பாடப் புத்தகங்களில் கூறப்படவில்லை. ஆனால் அவரை கூகிள் நிறுவனம் 24.09.20 அன்று டூடில் சித்திரம் ஒன்றின் மூலம் அவரை நினைவு கூர்ந்து கௌரவப்படுத்தியுள்ளது.

இந்தியா இலங்கை உட்பட பல தெற்காசிய நாடுகளில் ஏராளமான விளையாட்டு வீரர்கள் உலகளவில் ஆளுமை செலுத்தி சாதனைகளைப் படைத்துள்ளனர். பி . டி . உஷா, கபில் தேவ், சச்சின் டெண்டுல்கர், அர்ஜுன ரணதுங்க, சுசாந்திகா ஜெயசிங்க, ஜூலியன் போலிங போன்ற பலரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

எனினும் ஆர்த்தி சாஹாவின் 80ஆவது பிறந்தநாளன்று கூகிள் அவரை நினைவு கூர்ந்துள்ளது அவரது சாதனைகளை அறிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்தியாவின் பிரிக்கப்படாத வங்காளத்தின் 1940 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் தேதி பிறந்தார். அவரது தந்தை பிரிட்டிஷ் இராணுவத்தில் பற்றியவர். இரண்டரை வயதில் தனது தாயை ஆர்த்தி இழந்தார். பின்னர் அவரது பட்டியால் வளர்க்கப்பட்ட அவர் தாய் மாமாவுடன் ஹூக்ளி நதிக்கரைக்கு குளிக்கச் சென்றபோது நீச்சல் பயிற்சி பெறத் தொடங்கினார். நீச்சலில் அவருக்கு இருந்த ஆர்வத்தைக் கண்ட தந்தை பஞ்ச்கோபால் சாகா மகளை நீச்சல் பயிற்சிக்கு அனுப்பினார். 1946ஆம் ஆண்டு உள்ளூர் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றது பெரிய சாதனைகளைப் படைக்க வேண்டும் எனும் கனவை அவருக்குள் விதைத்தது.




படிப்படியாகத் தனது திறமையை மேம்படுத்திக் கொண்ட ஆர்த்தி சாஹா மாநில அளவிலும் பின்னர் தேசிய அளவிலும் தனது ஆளுமையை நிரூபித்து வந்தார். நீண்டதூர நீச்சல் போட்டியில் அவர் சிறப்புப் பயிற்சி எடுத்து வந்தார். நாம் இன்று தொலைக்காட்சியில் ஒலிம்பிக்ஸ் போன்ற போட்டிகளில் காண்பது போலில்லை கடலில் நீண்டதூரம் நீந்துவது. அதற்குத் தனியான சிறப்புப் பயிற்சியும் மன உறுதியும் தேவை. திசையைக் காட்டவோ அல்லது உடனடி மருத்துவ உதவிக்கோ பெரிய வசதிகள் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இல்லை.

அப்படியான சூழலில் தனது 19ஆவது வயதில் அவர் படைத்த சாதனையே உலகம் அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது. உலகளவில் நீண்டதூர நீச்சலில் மிகவும் சவாலாகக் கருதப்படுவது இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையே இருக்கும் ஹஇங்லி' சானல்ஹ அல்லது இங்லிஷ் கால்வாயைக் கடப்பதாகும்.



மிகவும் சவாலான அந்தக் கால்வாயை ஆர்த்தி சாஹா தனது 19ஆவது வயதில், 61 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 29 செப்டம்பர் 1959 அன்று பிரான்ஸின் கேப் கிரிஸ் நெஸ்ஸிலிருந்து இங்கிலாந்தின் சாண்ட் கேட்க்கு இடையேயான 42 மைல் (63கிமீ) தூரத்தை நீந்திக் கடந்தார். அவ்வகையில் இங்லிஷ் சானலை நீந்திக் கடந்த முதல் ஆசியப் பெண் எனும் பெருமையை ஆர்த்தி சாஹா பெற்றார்.

அவரது அந்தச் சாதனையையும் ஆர்த்தியின் 80ஆவது வயதையும் குறிக்கும் வகையிலும் கூகிள் அந்த டூடிலை வெளியிட்டுள்ளது. அந்தக் காலகட்டத்தில் இந்தியாவின் குக்கிராமம் ஒன்றில் பாரம்பரியமான குடும்பத்தில் பிறந்த ஒரு பெண் நீச்சல் உடையணிந்து இங்லிஷ் கால்வாயைக் கடப்பது என்பது கனவில் கூட எண்ணிப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது.

அதற்கு முன்னர் 1952ஆம் ஆண்டு பின்லாந்து நாட்டுத் தலைநகர் ஹெல்சின்கியில் நடைபெற்ற 15ஆவது ஒலிம்பிக் போட்டியில் அவர் பங்கேற்ற போது சர்வதேசம் அவரை உற்று நோக்க ஆரம்பித்தது. இதனிடையே அப்போது கிழக்கு வங்காளம் (இப்போது பங்ளாதேஷ்) என்று அழைக்கப்பட்ட இந்திய பகுதியைச் சேர்ந்த புரோஜேன் தாஸ் என்பவர் 1952ஆம் ஆண்டு இங்லிஷ் கால்வாயை முதலில் நீந்திக் கடந்த ஆசியர் என்ற பெருமையைப் பெற்றார்.



சாஹாவின் திறமைகளைக் கண்ட தாஸ் இங்கிஷ் கால்வாயை கடக்கும் போட்டியை நடத்தும் அமைப்பான பட்லின் இண்டர்நேஷனல் கிராஸ் சேனல் ஸ்விம்மிங் ரேஸ் அமைப்பாளர்களிடம் 1953ஆம் ஆண்டு போட்டியில் பங்கேற்க ஆர்த்தி சாஹாவை அழைக்குமாறு பரிந்துரைச் செய்தார். ஆனால் அதற்கான நிதியைத் திரட்டி அதில் பங்குபெறுவதற்கு போதிய வசதிகள் சாஹாவிடம் இல்லை. அந்நிலையில் இந்திய அரசின் உதவி அவருக்குக் கிடைத்தது.

பின்னர் ஆறு ஆண்டுகள் கடுமையாக அந்த இலக்கை நோக்கி பயிற்சியை முன்னெடுத்தார் ஆர்த்தி சாஹா. 1959 ஜூலை மாதம் 24ஆம் தேதி அவர் தனது மேலாளர் டாக்டர். அருண் குப்தாவுடன் இந்தப் போட்டிக்காக இங்கிலாந்து பயணமானார். இத்தாலியின் நேப்பிள்ஸின் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற பிறகு அங்கிருந்து அவர் இங்கிலாந்து வந்தார். அந்த போட்டியில் பங்குபெற்ற டாக்டர்.பிமல் சந்திரா ஆர்த்தியை வழிநடத்தினார்.

அந்த ஆண்டு ஐந்து பெண்கள் உட்பட 23 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அந்தப் போட்டியில் பங்கு பெற்றனர். அந்தப் போட்டி 28/08/1959 அன்று பிரான்ஸில் உள்ளூர் நேரம் அதிகாலை ஒரு மணிக்கு போட்டி தொடங்கியது. ஆனால் துரதிருஷ்டவசமாக அவருக்கு வழிகாட்டியாகச் செல்லும் படகு தாமதமாக வந்ததால் போட்டி தொடங்கி 40 நிமிடங்களுக்கு பிறகே அவரால் நீந்த ஆரம்பிக்க முடிந்தது. இதனால் சாதகமான சூழலை அவர் இழக்க வேண்டியதாயிற்று.




எனினும் சவால்களுக்கிடையே நீந்திய அவர் அன்று காலை 11 மணியளவில் 40 மைல்களுக்கும் கூடுதலான தூரத்தைக் கடந்து இங்கிலாந்து கடற்கரையிலிருந்து 5 மைல் தொலைவிலேயே இருந்தார். ஆனால் கடும் எதிர்க்காற்று காரணமாக மாலை நான்கு மணியளவில் அவரால் மேலும் இரண்டு மைல்களே நீந்த முடிந்தது. தொடர்ந்து முன்னேறி இங்கிலாந்து கரையைத் தொட்டுவிட அவர் சித்தமாக இருந்தாலும் அவரது வழிகாட்டிகளின் அழுத்தம் காரணமாக அவர் போட்டியைக் கைவிட வேண்டியதாயிற்று. தனது முயற்சியில் தளரான ஆர்த்தி சாஹா ஒரு மாதத்துக்குப் பிறகு 29/09/1959 அன்று தனது இரண்டாவது முயற்சியைப் பிரஞ்சு எல்லையான கேப் கிரிஸ் நெஸ்ஸிலிருந்து தொடங்கினார். மனம் தளராமல் உறுதியாக 16 மணி 20 நிமிடங்கள் நீந்தி இங்கிலாந்தின் சாண்ட்கேட் கரையை அடைந்து அங்கு இந்தியக் கொடியை ஏற்றினார்.

அவரைத் தொடர்ந்து ஆசியாவிலிருந்து பலர் இங்லிஷ் கால்வாயை நீந்தி வெற்றி கண்டனர். அவரது சாதனையைப் பாராட்டி இந்திய அரசு அவருக்கு நாட்டின் நான்காவது உயரிய ஹபத்மஸ்ரீஹ விருதை வழங்கி கௌரவித்தது. மிகக் குறைந்த வயதிலும் விளையாட்டுக்காகவும் முதலாவதாக அந்த விருதைப் பெற்றவர் ஆர்த்தி சாஹா.

பல சாதனைகளைப் படைத்த அவர் 23/08/1994 அன்று காலமானார். பல பெண்கள் நீச்சல் விளையாட்டில் ஈடுபட முன்மாதிரியாக இருந்த அவரை பாரட்டி கௌரவிக்கும் வகையில் கூகிள் அந்த டூடிலை வெளியிட்டுள்ளது.




SHIRIDI SAI SCHOOL
OF CANADA
ADMISSIONS
OPEN FOR
J/S KINDERGARTEN TO GRADE 6
TO REGISTER YOUR INTEREST PLEASE CALL
416-298-3030
2701 MARKHAM ROAD, SCARBOROUGH


உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்
PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000


அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
உங்கள் பழைய
நகைகளை அதியுயர்
பெறுமானத்திற்கு எம்மிடம்
விற்றுக்கொள்ளலாம்
1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)
416-757-0034
416-994-3861
உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்
105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்
எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

# சத்தியன் வசனங்கள்



நேற்று முன்தினம் புதன்கிழமை காலை எனது வாகனம் றிச்மண்ட்ஹில் விநா-யகர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றது. திடீரென எனது மனம் "பக்திக்கு முக்கியம் கொடு" என்றது. எனவே இந்த ஆலயத்திற்கு செல்வோம் என்று முடிவெடுத்தபோது, சில நிமிடங்களில் நான் வாகனத்திலி'ருந்து இறங்கி ஆலயத்தின் வாகனத்தரிப்பிடத்தில் பாதங்களைப் பதித்தேன்.

மிகுந்த பரவசப்பட்ட நிலையில் நான்கு திசைகளிலும் என் பார்வை சென்றது. வெள்ளை நிறத்திலான கோபுரங்களின் அழகு என்னையும் தூய்மைப்படுத்தியது.

எத்தனை வருடங்களுக்குப் பின்னர் இங்கு வந்துள்ளேன் என்ற விபரம் ஞாபகத்திற்கு வருவதாக இல்லை. ஆனால் இன்றிலிருந்து சுமார் 30 வருடத்திற்கு முன்னர் எனது குடும்பத்தோடு கனடாவிற்கு பறந்து வந்து, இறங்கி வீடு சென்று உறவினர்களைக் கண்டு களித்து ஒருவாரம் கழிய எனது மைத்துனர் அமரர் சத்தியகுமார் என்மை இந்த ஆலயத்திற்கு அழைத்து வந்தார்.

அந்த நேரத்தில் தமிழ் பேசும் இந்துக்களுக்கான ஒரேயோரு ஆலயம் இதுதான் என்று சொல்லியிருந்தார்கள். நாம் சென்ற வேளையில் கூட்டம் அதி-கமாக இருந்தது. கனடாவின் அழகில் ஏற்கெனவே லயித்துப் போயிருந்த எனக்கு பிள்ளையார் ஆலயத்தின் நேர்த்தியான அமைப்பு, ஆன்மீகத்தின் அவசியத்தை உணர்த்தி நின்றது.

இந்த 20 ஆண்டுகளில் இந்த ஆலயத்திற்கும் எனக்கும் இடையிலான செய்திகள் சம்பவங்கள், நெகிழ்ச்சியான விடயங்கள், அங்கு சில சமயங்களில், உரையாற்றக்கிடைத்த சந்தர்ப்பங்களின்போது நான் அடைந்த, பக்தியோடு கூடிய உற்சாசம். இவ்வாறு பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இந்த ஆலயத்தின் நிர்வாக சபையில் எமது ஈழத் தமிழ் அன்பர்களோடு தமிழ்நாட்டைச் சேர்ந்த அன்பர்களும் நிர்வாகத்தில் தொடர்புடையவர்களாக இருந்தார்கள்.

அப்போதை நிர்வாகத்தில் இருந்த அமரர் ந. சிவலிங்கம், விக்னேஸ்வரன், சண்முகதாஸ், வெங்கட்ராமன், சக்தி, கோடீஸ்வரன், போர்ட்டெல்லோ இராஜதுரை ஆகியோரை நினைத்துப் பார்க்கின்றேன்.

ஆன்மீகம் சார்ந்த ஒரு நிறுவனமாக இருந்தாலும், எமது ஈழத்தமிழர்கள் ஒன்று கூடி தங்கள் சமூக அரசியல் கலாச்சார விடயங்களை பகிர்ந்துகொள்கின்ற ஒரு மையமாகவும் இந்த றிச்மண்ட்ஹில் விநாயகர் ஆலயம் திகழ்ந்தது என்றால், அது மிகையாகாது.

முன்னைய மன்னர் ஆட்சி காலங்களில் ஆலயங்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இல்லாமல் அன்னமிடும் மையங்களாகவும் திகழ்ந்து பசியோடு வருகின்ற நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் இடங்களாகவும் திகழ்ந்தன என்பது நாம் நூல்களில் படித்தவை.

அதைப்போலவே, நான் கனடாவில் இந்த ஆலயத்தில் நேரடியாகப் பார்த்து வியந்தவை பல. பத்திரிகைத்துறைக்குள் புகுந்து எனது தொடர்புகள் இன்னும் அதிகமான பின்னர் எனக்கு நாளாந்தம் கிடைக்கும் தகவல்கள் எனக்கு மகிழ்ச்சியை அளித்தன.

இந்த ஆலயத்தில் வெறுமனே வழிபாடு மட்டுமல்ல, அந்த நாட்களில் கனடாவிற்கு அகதிகளாக வரும் எம்மவர்களுக்கு தேவையான உதவிகள் ஆலோசனைகள் வழங்கும் ஒரு தலமாகவும் றிச்மண்ட்ஹில் விநாயகர் ஆலயம் விளங்கியதற்கு நான் மட்டும் அல்ல, பலரும் சாட்சிகள்.

அதற்குக் காரணம், அப்போது இயங்கிவந்த கனடா தமிழீழச் சங்கத்தின் தலைவராக விளங்கிய "தலைவர்" ந. சிவலிங்கம் அவர்கள் இந்த ஆலயத்தின் நிர்வாகத்தில் பலமுள்ள பதவியிலிருந்த படியால் எமது மக்களுக்கு சேவைகள் வழங்கும் ஒரு மையமாகவும் விளங்கியது றிச்மண்ட்ஹில் விநாயகர் ஆலயம்.

இந்த "தலைவர் சிவலிங்கம் அவர்கள் தான் தற்போதைய எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் மாமனார் என்பது பலருக்கும் நன்கு தெரியும்.

இந்த அலயம் நிதி வளம் நிறைந்த ஒன்றாக இருந்தபடியால் கனடாவில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிதித்தேவை உள்ள நிறுவனங்களுக்கும் உதவிகள் வழங்கும் நல்லெண்ணத்தை நிர்வாக சபையில் இருந்தவர்கள் கொண்டிருந்ததனால் அந்த தர்மப் பணிகளும் சாத்தியமாகின.

குறிப்பாக சுனாமி எமது தாயகத்தில் பல அனர்த்தங்களை எற்படுத்தியபோது கூட பெரும் தொகை பணத்தை எமது தாயகத்திற்கு அனுப்பிவைத்தது இந்த ஆலய நிர்வாக சபை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக வழிபாட்டுக்குச் சென்ற எனக்கு இந்த ஆலயத்தின் பொது நோக்கம் கொண்ட பணிகள் ஞாபகத்திற்கு வந்தது, வியப்புக்குரிய ஒன்றல்ல.

வாகனத் தரிப்பு இடத்தில் நின்றவண்ணம் சுமார் 29 ஆண்டுகள் பின்னால் சென்றிருந்த எனது மனம் என்னை ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றது.

அங்கு அலுவலக நிர்வாகியும் சிவாச்சாரியப் பெருமக்களும் என்னோடு அளவளாவி அர்ச்சனை செய்து வழிபட்ட பின்னர் மீண்டும் வாகனத் தரிப்பிடத்திற்கு வந்தேன்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பார்களே. அந்த அழகி-ய வெள்ளைக் கோபுரங்களை பார்த்து பரவசத்துடன் வணங்கிவிட்டு எனது வாகனத்தில் ஏறிக்கொண்டேன்.

----------------------------------------------------------------------

கனடாவும் அமெரிக்காவும் பக்கத்து நாடுகள் (Neighbouring Countries). அமெரிக்காவை "உலகின் வல்லரசு" என்று அழைப்பதை அமெரிக்கர்களில் பலர் விரும்புகின்றார்கள். அந்த தேசத்தின் அரசியல் தலைவர்கள் கூட அதையே வலியுறுத்தி வருகின்றார்கள்.

ஆனால் கனடா அப்படியல்ல. வல்லரசாக வேண்டும் என்ற எண்ணமே இல்லாத உன்னதமான நாடு.

நான் கடந்த பல ஆண்டுகளில் சில இடங்களில் அமெரிக்கர்களைப் பற்றி வாசித்த போது, அங்கு பல நடுத்தர வர்க்க குடும்பங்களின் தலைவர்கள், தாங்கள் வைத்தியசாலைகளுக்கு செல்லுவதற்கு அஞ்சுவதாகவும் அதற்கான காரணங்களையும் பதிவு செய்துள்ளதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்.

உலக நாடுகளின் "அப்பா" என்கின்ற ஒரு நாட்டில், மக்கள் தங்கள் நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற வைத்தியசாலைகளுக்கு செல்ல, தயக்கம் காட்டுகின்றார்கள். காரணம் அபரீதமான கட்டணம். காப்புறுதியோ அன்றி பணமோ இல்லாதவர்கள் "சிகிச்சை பெறாமலே இறந்து போவோம்" என்று கூட கவலையோடு தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகத்தானோ என்னவோ இந்த கோவிட்-19 காரணமாக மரணிப்பவர்களின் தொகை அமெரிக்காவில் உச்சத்தை எட்டியுள்ளது?

அண்மையில் எனது நண்பர் ஒருவர் கூறினார். ஒரு அமெரிக்க கறுப்பினப் பெண் எழுதியுள்ளாராம்.

"நான் எனது நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு வைத்திசாலைக்கு செல்ல அஞ்சுகின்றேன். காரணம் எனது நோய் சற்று பாரதூரமானது. நான் தொழிலுக்கு செல்வதில்லை. எனது மகன் மட்டுமே தொழில் பார்க்கின்றார்.. ஆனால் அவரது வருமானமோ அன்றி அவர் வைத்திருக்கும் காப்புறுதியோ எனது சிகிச்சைகளுக்கு போதுமா-னதாக இல்லை.




அதனால நான் இந்த நோயோடு காலத்தைக் கடத்தி நேரம் வரும்போது இறந்து விடுவோம் என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்" என்று அதைப் படித்த எனது நண்பருக்கு கண்களிலிருந்து நீர் வழிந்தோடியதாம்.

ஆனால் நாம் வாழும் கனடிய தேசத்தின் மருத்துவத் திட்டம் மகத்தானது. எம்மிடம் உள்ள பச்சை மட்டையை மட்டும் கொண்டு சென்றால் சிரித்த முகத்தோடு எம்மை வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பதிவு செய்து உள்ளே அனுப்புகின்றார்கள்.

கட்டணங்கள் பற்றிய பயமே இன்று எம்மில் பலர் தங்கள் தீவிரமான நோய்களிலிருந்தே காப்பற்றப்படுகின்றார்கள்.

Lands of Opportunities என்று சொல்லப்படுகின்ற அமெரிக்கா-கனடா போன்ற நாடுகளில் எத்தனை வேறுபாடுகள் பாருங்கள்.

கனடாவிற்கு புதிய குடிவரவாளர்களாக வருபவர்கள் இங்கு கால் பதித்து சில நாட்களிலேயே அரசாங்க மருத்துவ காப்புறுதித் திட்டத்திற்கு உரித்தவர்கள் ஆகின்றார்கள் கனடியர்கள் எவருமே இறக்கும் வரை தங்கள் மருத்துவச் சிகிச்சைச் செலவுகள் பற்றிய கவலையே இல்லா இந்த அற்புதமான தேசத்தில் வாழ்வைக் கழிக்கலாம்.

இங்குள்ள சலுகைகளை அனுபவிக்கக் கிடைத்தமைக்காக கடவுளுக்கும கனடாவிற்கும் நன்றி செலுத்துவோம். இங்குள்ள சட்டங்கள் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு விசுவாசமாக நடந்து கொள்வோம்.

# கனடாவில் சிறப்பாக நடைபெற்ற 'நண்பன்' விருதுகள் வழங்கும் விழா

*(பின் பக்கத் தொடர்ச்சி)*

கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர்கள் திருவாளர்கள் சங்கர் நல்லதம்பி, கிருஸ்ணகோபால் செல்லத்துரை, ஆகியோருக்கும் திரு நாகப்பன் வெங்கடேசன் என்னும் கணணித்துறை விற்பன்னருக்கும், இ-குருவி நிறுவன அதிபர் நவஜீவன் அனந்தராஜ் மற்றும் கனடாவில் மூன்று கிளைகளைக் கொண்டியங்கும் சரவணபவன் உணவகக் குழுமத்திற்கும் 'நண்பன்' விருதுகள் வழங்கப்பெற்றன.

விழாவை பிரபல தொகுப்பாளினி சில்வியா பிரான்சிஸ் அவர்கள் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

பிரதம விருந்தினராக கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசின் முதி-யோர் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு றேமண்ட் சோ, மற்றும் மாகா-ணப் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் அரிஸ் பாபிகியான், லோகன் கணபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறந்த உரைகளை ஆற்றிய பின்னர், வெற்றியாளர்களுக்கான விருதுகளையும் வழங்கிக் கௌரவித்தனர்.

வரவேற்புரையை திரு மரியாம்பிள்ளை மரியாராசா ஆற்றினார். மேலும் நட்பரைகளை திருவாளர்கள் எஸ். ஜெயானந்தசோதி, மற்றும் எம் விவேகானந்தன் ஆகியோர் வழங்கினார்கள்.

விழாவின் ஆரம்பத்தில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கனடாவில் திருமதி குகணேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களின் நாத வீணா மன்றத்தின் மாணவ மாணவி-களான செல்வன் இமயவர்மன் சிவகாந்தன், செல்வி காசிவி செந்தில்மணாளன் ஆகியோர் வீணைவாத்திய இசை வழங்க, கிறிஸ்ரியன் சுதர்சன் கீபோர்ட் மற்றும் சவரிமுத்து தேவராஜ் தபேலா இசை வழங்க வீணை வாத்தியக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது.

அடுத்து கனடாவில் இயங்கிவரும் சக்தி நர்த்தனாலயா நுண்கலைக் கூடத்தின் அதிபர் திருமதி ஜனனி ரவிசங்கரின் மாணவிகள் செல்விகள் ஜோய்ஸ்னா இந்துநாதன், நிவேதிகா தீபக், வேதிகா சந்தர் மற்றும் நிவேதி அற்புதராஜா ஆகியோர் அற்புதமான நடன நிகழ்ச்சியை வழங்கினார்கள்.

இந்த கோவிட்-19 தொடர்பான பல கட்டுப்பாடுகள் இருந்தும் மிகவும் நேர்த்தியாகவும் குறிப்பிட்ட நேரத்திற்கும் இந்த விழா நடத்தப்பட்டதை அனைவரும் பாராட்டிச் சென்றனர்.

பின் பக்கம் காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

(படங்கள் உதவி- செய்தி.கொம், ஜிரிஎ ஊடகம், ஐயா 4 யூ ஆகியோர்),

# இவ்வார ராசிபலன்

**25-09-2020 வெள்ளி தொடக்கம் 01-10-2020 வியாழன் வரையும்**




மேஷம்:
பணவரவில் லாபமும் உடல்நலத்தில் ஷேமமும் கிடைக்கக்கூடிய வாரம். நட்டம் இல்லாத நாள். பட்டம் பதவி வந்து சேரும். யோகமான வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி
அதிர்ஷ்ட எண்: 4, 2, 0, 7 அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H, T




ரிஷபம்:
கலைந்த குடும்பம் ஒன்று சேரக்கூடிய கலகலப்பான வாரம். முத்தான வாய்ப்புகள் பெருகும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். கௌரவமான வாரம். கலைத் தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிட தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். வழிபடவேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை அதிர்ஷ்ட எண்: 1, 3, 7, 1 அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B, Z




மிதுனம்:
சந்தோஷமான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலைகளும் உள்ள யோகமான வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும்.
வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. வழிபடவேண்டிய தெய்வம்: பாதாள பைரவா
அதிர்ஷ்ட எண்: 5, 0, 5, 4 அதிர்ஷ்ட நிறம்: அரக்கு. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H, A




கடகம்:
செல்வாக்கு மூலமாகவே செல்வாக்கு உயரக்கூடிய வாரம். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச் செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வழிபடவேண்டிய தெய்வம்: வீர அனுமன்
அதிர்ஷ்ட எண்: 8, 5, 1, 3 அதிர்ஷ்ட நிறம் : நீலம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F, L




சிம்மம்:
பணிவான பேச்சுக்களால் பணவரவை சேர்த்துக் கொள்ளக்கூடிய வாரம். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். முதலீடு உண்டாகும். தொலை தூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசு கரையாது. நினைத்தது நடக்கும். அதிதேவதை வழிபாட்டால் ஐஸ்வர்யம் கூடும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செலவுகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சித்ரகுப்தா அதிர்ஷ்ட எண்: 2, 4, 5, 9 அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K, Q




கன்னி:
தேவைகள் பூத்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். மகிழ்ச்சி அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீராமபிரான் அதிர்ஷ்ட எண்: 0, 7, 2, 9 அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D, X




துலாம்:
போட்டி, பொறாமைகள் மறையக் கூடிய மகத்தான வாரம். தங்க நகைகள் சேரும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரி-யால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கவனம் தேவை. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிக-ளால் தொல்லை உண்டாகும். பிரார்த்தனையால் பலன் உண்டு. வழிபடவேண்டிய தெய்வம்: குரு பகவான் அதிர்ஷ்ட எண்: 2, 1, 0, 8 அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R, D




விருச்சிகம்:
பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய பகட்டான வாரம். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவி-கள் கிட்டும். உடல் நலம் சீராகும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புகள் கூடும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஐங்கரன்
அதிர்ஷ்ட எண்: 1, 2, 6, 9 அதிர்ஷ்ட நிறம்: நீலம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X, N




தனுசு:
எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடக்கக்கூடிய எதார்த்தமான வாரம். குதூகலப் பயணம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். தொழில் நிம்மதி கொடுக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். நல்வர் நட்பு உருவா-கும். தோல்வி நிலை மாறும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வழிபடவேண்டிய தெய்வம்: குபேர பகவான் அதிர்ஷ்ட எண் : 7, 4, 6, 9 அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G, C




மகரம்:
வம்பு தும்புகள் ஒழிந்து வரவுகள் அதிகரிக்கக்கூடிய வாரம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரமான வாரம். பணப்பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிக-ாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். வழிபடவேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமாள் அதிர்ஷ்ட எண்: 8, 6, 2, 9 அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D, O




கும்பம்:
பூமியால் லாபமும் புத்திர யோகமும் கிடைக்கக்கூடிய வாரம். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் தேவைகள் அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். விமங்கள செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நிதானம் நல்லது. வழிபடவேண்டிய தெய்வம்: வீர விநாயகர்
அதிர்ஷ்ட எண்: 9, 6, 4, 7 அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S, H




மீனம்:
உபயோகமும் உன்னதமும் நிறைந்த நல்ல வாரம். வெகுதி பெருகும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். உத்தியோகம் இடமாற்றம் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. திடீர் செலவு ஏற்படும். வழிபடவேண்டிய தெய்வம்: சந்திர பகவான் அதிர்ஷ்ட எண்: 6, 3, 2, 1 அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y, L




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# பேரறிவாளனுக்கு 30 நாட்கள் ‘பரோல்’ : ஒரு வாரத்தில் வழங்க உயர் நீதிமன்றம் உத்தரவு



உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள பேரறிவாளனுக்கு கரோனா தொற்று ஏற்படலாம், வயதான பெற்றோரை பார்க்க வேண்டும் என்ற காரணங்களைக் காட்டி 90 நாட்கள் பரோல் கோரிய தாயார் அற்புதம்மாள் வழக்கில் பேரறிவாளனுக்கு 30 நாட்கள் பரோல் வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.ராஜிவ் கொலை வழக்கில் ஆயுள் கைதியாக சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால், அவருக்கு 90 நாட்கள் பரோல் வழங்கக் கோரி அவரது தாயார் அற்புதம்மாள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, பரோல் மனுவை நிராகரித்துவிட்டதாக தமிழக அரசும், சிறைத்துறையும் தெரிவித்தன. இந்த வழக்கு நீதிபதிகள் என்.கிருபாகரன், வி.எம்.வேலுமணி அமர்வில் கடந்த 8ம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது, அற்புதம்மாள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம், “பேரறிவாளனின் தாய் தந்தை இருவரும் வயதானோர் என்பதாலும், அவர்களை கவனித்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.தமிழக அரசு 7 பேரையும் விடுவிக்க பரிந்துரைத்த நிலையில், ராஜீவ்காந்தி கொலையில் சர்வதேச தொடர்பு குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட பன்னோக்கு விசாரணை முகமையை காரணம் காட்டி அதன் மீது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.சிறை விதிகளில் விலக்களித்து பேரறிவாளனுக்கு பரோல் வழங்க உத்தரவிட வேண்டும். விடுதலை செய்ய முடிவெடுத்த அரசு, பரோல் வழங்க எதிர்ப்பு தெரிவிக்கிறது.

விடுதலை செய்ய முடிவெடுத்ததும், விடுப்பு மறுப்பதும் ஒரே கட்சியின் தலைமையிலான அரசுதான்” என வழக்கறிஞர் சண்முகசுந்தரம் சுட்டிக்காட்டினார்.அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், “பரோல் விண்ணப்பங்கள் மீது இரண்டு வாரங்களில் முடிவெடுக்க வேண்டும் என சட்டத் திருத்தம் கொண்டு வரும்படி ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது” என அரசுத்தரப்புக்கு கேள்வி எழுப்பினர்.மேலும், பரோல் கோரிய விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்க ஆலோசனைகள் வழங்க சிறைத்துறையில் சட்ட ஆலோசகரை ஏன் நியமிக்க கூடாது எனவும் நீதிபதிகள், அரசுக்கு கேள்வி எழுப்பினர்.

இதுகுறித்து அரசிடம் விளக்கம் கேட்க வேண்டியுள்ளதாகவும், அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞரிடம் தெரிவிப்பதாகவும் அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், பேரறிவாளன் பரோல் வழக்கை பொறுத்தவரை, அவரது உடல்நிலை முழுமையாக, புழல் மருத்துவமனையிலேயே தினசரி கவனிக்கபடுகிறது.அவரது உடல் நிலையில் எவ்வித குறைபாடும் இல்லாமல், சீரான நிலையில் இருப்பதாக பதில் மனுத்தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார். அனைத்து சிறைவாசிகளுக்கும் கரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளும் முழுமையாக பின்பற்றப்பட்டு உள்ளதாகவும் பதில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார்.மேலும், விடுதலை செய்ய தீர்மானம் நிறைவேற்றினாலும், சிறையில் இருக்கும் வரை சிறை விதிகளை கடைபிடிக்க வேண்டும், கரோனா தொற்று காலத்தில் சிறையில் இருப்பதே பாதுகாப்பானது என அரசு வழக்கறிஞர் பிரதாப்குமார் வாதிட்டார்.

கடந்த முறை பேரறிவாளனுக்கு வழங்கிய பரோல், கடந்த ஜனவரி மாதம் தான் முடிந்ததால், இரண்டு ஆண்டுகளுக்கு பிறகுதான் மறுபடியும் பரோல் கேட்க முடியும். அமைச்சரவை மாறியிருந்தாலும், முடிவெடுத்த அரசுகள் ஒன்றுதான் என்பதை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், இந்த வழக்கின் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.இந்நிலையில் இன்று வழக்கில் உத்தரவு பிறப்பித்த நீதிபதிகள் கிருபாகரன், வேல்முருகன் ஆகியோர், பேரறிவாளனுக்கு 30 நாட்கள் பரோல் வழங்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

உத்தரவு கிடைத்த ஒரு வாரத்திற்குள் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து, 30 நாட்கள் விடுப்பு அளிக்கவேண்டும் என உத்தரவிட்டுள்ளனர்.அவர் விடுப்பில் இருக்கும் காலங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளுக்காக சிறைத்துறை விதிக்கும் நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினர்.

## விஜயகாந்த் பூரண உடல் நலத்துடன் உள்ளார், விரைவில் வீடு திரும்புவார்: பிரேமலதா விஜயகாந்த்



விஜயகாந்த் பூரண உடல் நலத்துடன் உள்ளார், விரைவில் வீடு திரும்புவார் என பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தேமுதிக தலைவர் விஜயகாந்த்(வயது 68) உடல் நலக்குறைவு காரணமாக, சென்னை, மணப்பாக்கத்தில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் நேற்று மாலை விஜயகாந்த் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து விஜயகாந்திற்கு கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின. மருத்துவமனையில் உள்ள கொரோனா சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு, அவருக்கு தொடர்ந்து கொரோனாவிற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

இதனைத்தொடர்ந்து தேமுதிக பொதுச் செயலாளர் விஜயகாந்த் பூரண உடல்நலத்துடன் உள்ளதாகவும், அவர் வழக்கமாக 6 மாதத்திற்கு ஒருமுறை உடல் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு செல்வது வழக்கம் என்றும் மருத்துவமனைக்கு சென்ற போது லேசாக தென்பட்ட கொரோனா அறிகுறி, உடனடியாக சரி செய்யப்பட்டு விட்டது என்றும் தேமுதிக தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் விஜயகாந்த் பூரண உடல் நலத்துடன் உள்ளார் என்றும் விரைவில் வீடு திரும்புவார் என்றும் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், “தேமுதிக தலைவர் விஜயகாந்த் பூரண உடல் நடத்துடன் இருக்கிறார். நாங்கள் அனைவரும் கொரோனா பரிசோதனை மேற்கொண்டோம். எங்களுக்கு நெகட்டிவ் வந்தது. விஜயகாந்திற்கு மட்டும் லேசான அறிகுறி இருந்தது. மருத்துவமனை அறிக்கையும் தேமுதிக அறிக்கையும் ஒன்றுதான். சிறு அறிகுறியுடன் சிகிச்சை பெற்றுவரும் விஜயகாந்த் இன்னும் ஓரிரு நாட்களில் டிஸ்சார்ஜ் செய்யப்படுவார். விஜயகாந்த் நலம் பெற வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி” என்று பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

மேலும், வீட்டில் நோட்டீஸ் ஒட்டக்கூடாது என்று கூறவில்லை என்றும், தனிமைப்படுத்துதல் வீடு என மாநகராட்சி நோட்டீஸ் ஒட்டுவதில் எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை என்றும், அரசின் அனைத்து விதிகளையும் மதிக்கும் கட்சி தேமுதிக என்பது எல்லோருக்கும் தெரியும்” என்றும் அவர் தெரிவித்தார்.

## வெட்டும் ஒரு மரத்துக்கு பதில் 10 மரக்கன்று வீதம் வளர்க்க முடியாவிட்டால் மரங்களை வெட்டாதீர்கள்: உயர் நீதிமன்றம் கண்டனம்

நெடுஞ்சாலை விரிவாக்கப்பணிக்காக வெட்டப்படும் ஒரு மரத்துக்குப் பதில் புதிதாக 10 மரக்கன்றுகள் நட வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்ற முடியாவிட்டால் சாலைப் பணிக்காக மரங்களை வெட்ட வேண்டாம் என நெடுஞ்சாலைத்துறையை உயர் நீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

விருதுநகரைச் சேர்ந்த வழக்கறிஞர் ஆனந்தமுருகன், உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனு: கன்னியாகுமரி முதல் வாரணாசி வரை சாலை விரிவாக்கம் செய்யப்பட்ட போது சாலையின் இரு பக்கங்களிலும் நின்றிருந்த 1.78 லட்சம் மரங்கள் வெட்டப்பட்டன.இதற்குப் பதிலாக விரிவாக்கப்பணி முடிந்ததும் 10 லட்சம் மரக்கன்றுகள் நட்டிருக்க வேண்டும். அதன்படி நெடுஞ்சாலைத்துறை மரங்கள் நடவில்லை.இது தொடர்பாக நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு விசாரணைக்கு வந்தபோது உயர் நீதிமன்ற உத்தரவுப்படி நெடுஞ்சாலகளில் மரங்கள் நடப்படும் என நெடுஞ்சாலைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகும் மரங்கள் நடப்படவில்லை.எனவே, தேசிய நெடுச்சாலையின் இரு பக்கங்களிலும் மரக்கன்றுகளை நடவும், அவற்றைத் தொடர்ந்து பராமரிக்கவும் நெடுஞ் சாலைத்துறைக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.இந்த மனு நீதிபதிகள் சத்தியநாராயணன், ராஜமாணிக்கம் அமர்வில் விசாரணைக்கு வந்தது. நெடுஞ்சாலைத்துறை வழக்கறிஞர் வாதிடுகையில், மரக்கன்றுகளை நடுவது தொடர்பாக வனத்துறையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மரங்களை நடவும், அவற்றை பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.பின்னர் நீதிபதிகள், சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகரித்துள்ளது. பருவமழை 3 மாதம் தாமதமாகவே வருகிறது. இது தொடர்ந்தால் சுற்றுச்சூழல் மேலும் மோசமடையும்.சாலை மேம்பாட்டுக்கு பணிக்காக ஒரு மரம் வெட்டினால் அதற்கு பதில் 10 மரக்கன்றுகள் நட வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதை பின்பற்றாவிட்டால் சாலை விரிவாக்கத்தின் போது மரங்களை வெட்ட வேண்டாம் என்றனர்.

தொடர்ந்து, சென்னை மதுரை தேசிய நெடுஞ்சாலையில் சாலை விரிவாக்கப் பணியின் போது எவ்வளவு மரங்கள் வெட்டப்பட்டன? அதற்கு பதிலாக எவ்வளவு மரங்கள் நடப்பட்டுள்ளன? என்பது குறித்து சென்னை, மதுரை தேசிய நெடுஞ்சாலை ஆணைய இயக்குனர்கள் பதில் மனுத் தாக்கல் செய்ய உத்தரவிட்டு, அடுத்த விசாரணையை நவ.5ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

## குஜராத்தில் தமிழ் பள்ளியை மூடுவதா? டாக்டர் ராமதாஸ் கண்டனம்



குஜராத்தில் தமிழ் பள்ளியை மூடப்பட்டது குறித்து டாக்டர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தனது டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: குஜராத் மாநிலம் ஆமதாபாத் மணிநகரில் செயல்பட்டு வரும் ஆமதாபாத் தமிழ் மேல்நிலைப்பள்ளியின் மாணவர் எண்ணிக்கை குறைந்து விட்டதாக கூறி அந்த பள்ளி மூடப்பட்டிருப்பது வேதனையளிக்கிறது. குஜராத் அரசை, தமிழக அரசு தொடர்பு கொண்டு தமிழ் பள்ளியை திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குஜராத்தில் மூடப்பட்ட தமிழ் மேல்நிலைப்பள்ளி, பிரதமர் நரேந்திர மோடி முதல்மந்திரியாக இருந்தபோது சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மணிநகர் தொகுதியில் உள்ளது.

தமிழ் மீது பற்று கொண்ட பிரதமர் தலையிட்டு தமிழ் பள்ளியை உடனடியாக திறக்க ஏற்பாடு செய்யவேண்டும்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 914



## செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில்

### - மட்டக்களப்பு -

செட்டிபாளையம் சிவன்கோயிலின் ஆரம்பத்திற்கும், வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட சுவாமிகள் இந்தியாவைச் சோந்தவர். அக்காலத்தில் கிழக்கிலங்கையின் கிராமப்புறங்களில் சமய அறிவும், விழிப்புணர்வும் அருகியே காணப்பட்டது. இவற்றை மக்களுக்கு ஊட்டி வளர்த்தவர் ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகளாவார். இச் சுவாமிகள், தமிழ், சிங்களம், ஆங்கிலம், அரபு, மலையாளம் போன்ற பல மொழிகளிலே வல்லவராகத் திகழ்ந்தார்.

அதேவேளை சமய உண்மைகளையும் நன்கு அறிந்து, மக்களுக்கு அவற்றை எடுத்துரைப்பதில் வல்லவராகக் காணப்பட்டார். மக்களுக்கு புரியும் வகையில் மகாபாரதம், இராமாயணம், கந்தப்புராணம் போன்றவற்றைப்பற்றியும், சமய தத்துவங்களைப்பற்றியும் பிரச்சாரங்களை மேற்கொண்டார். செட்டிபாளையத்திலே சிவனுக்கு மட்டுமன்றி, குருக்கள் மடத்தில் மகாவிஷ்ணு ஆலயத்தினையும் இவரே அமைத்தார்.

இளையவர்களிடையே சமய சமூகப் பணிகளை முன்னெடுக்கும் நோக்கோடு, ஆண்களுக்கென திருவருள் வாலிபர் சங்கத்தினையும், பெண்களுக்கென திருவருள் மாதர் சங்கத்தினையும் ஏற்படுத்தி, ஆலயத்திலே மட்டுமன்றி சமூகத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தினார். இவ்விரு சங்கங்களும் ஒன்றுகூடி, செட்டிபாளையம் சிவன் கோயிலின் நிர்வாகத்தை நடத்தின.

ஆலயங்களை அமைப்பதும் பூசை வழிபாடுகள், விழாக்கள், விரதங்களை மேற்கொள்வதும் மட்டும் மக்களை சமூகநெறியில் தொடர்ந்து ஈடுபடுத்தாது என்பதை சுவாமிகள் அன்றே திட்டவட்டமாக உணாந்திருந்தார்கள். ஆலய வழிபாடும் அது தொடர்பான விடயங்களும் மட்டும் இந்து மதத்தை செம்மைப்படுத்த முடியாது. அவற்றோடு இணைந்த சமூகப்பணிகளும் செய்யப்பட வேண்டும் என்ற இந்து மத ஆர்வலர்களின் ஆழமான கொள்கைக்கு, சுவாமியின் செயற்பாடுகள் அத்திவாரமிட்டன. இத்தகைய காலத்திற்கேற்ற எண்ணங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்திய சுவாமியின் பெயரை, கடவுளுடைய திருநாமத்தோடு சேர்த்தமை பொருத்தமுடையதே.

கற்கோயில் கட்டப்பட்ட செட்டிபாளையம் சிவன் கோயிலில், 1981 ஆம் ஆண்டு, களுதாவளைப்பிள்ளையார் கோயில் பூசகர், சிவஸ்ரீ சு. சந்திரசேகரக் குருக்கள் தலைமையில், குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இத்தருணத்திலே செட்டிபாளையம் சிவன்கோயிலின் நிறுவனராகவும், சமய, சமூக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவருமான ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகள் சமாதியடைந்தார்கள்.

சுவாமி சமாதியடைந்த பின்னர், கிராமத்து மக்களும், சுவாமியால் எற்படுத்தப்பட்ட சங்கங்களும் ஒன்று சேர்ந்து நிதிசேகரித்து, ஆலயத்திலே பல புனருத்தாரணப்பணிகளை மேற்கொண்டு, சில ஆண்டுகளின் பின் மீண்டும் கும்பாபிஷேகப் பெருவிழாவை நிகழ்தினர். இதன்பின்னர் இவ்வாலயத்திலே விசேட பூசைகளும், தீர்த்தோற்சவமும் நடைபெற்றது. ஆனால் சுவாமி வீதிவலம்வரும் விழாக்கள் நடைபெறவில்லை.

"ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்றுரைக்கின்றது சிவஞானபோதம். உயிரானது தான் சார்ந்த பொருளை சாரும் தன்மை கொண்டது. பிறவிப் பிணியில் அகப்பட்டு அல்லலுறப்படும் உயிர்களின் வினை நிக்கி ஈடேற்றம் அடையுமுகமாக, முன்னோர்கள் ஆலயங்களை அமைத்தனர். ஆலயங்கள் அறிவை வளர்க்கும் இடமாகவும், அறச்சாலைகளாகவும், மனிதகுலத்தை மேம்படுத்த வல்லவையாகவும் சமூக ஈடேற்றத்திற்கு உறுதுணையாகவும் காணப்பட்டன. இக்கூற்றிற்கு ஆதாரமாக ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகள் நிறுவிய ஆலயம் திகழ்ந்தது.

இக்காரணத்தினாலேயே முன்னோர்கள் கோயில்களைக்கட்டி அங்கு திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்தனர். பூசை, திருவிழா முதலியவற்றை ஏற்படுத்தி மக்கள் சிந்தனையை இறைவழிபாட்டில் ஈடுபட உதவினர். இதன்மூலம் மனிதகுலம் இறைவனைச் சாரும் நிலை ஏற்படுத்தப்பட்டது. இறைவனைச் சார்ந்த உள்ளம் தன்னுயிர் போல மன்னுயிர்களையும் பேணும் பண்பைக் கொண்டு விளங்கும்.

ஓர் செயலைச் செய்யும்பொழுது காலம், இடம், கருவி ஆகியவற்றின் துணைகொண்டு செயற்பட்டாலும், சிலவேளைகளில் நாம் நினைப்பதும், இறைவன் நினைப்பதும் வேறுவிதமாக அமைந்துவிடுகின்றன. இதன்மூலம் மனித ஆற்றலுக்குமீறிய ஒரு ஆற்றல் இருப்பதை மனிதகுலம் ஏற்றுள்ளது. இந்த ஆற்றலை ஆத்திகர்கள் இறைசக்தி என அழைக்கின்றனர். இறைசக்தியைப் பெற கோயில்கள் ஆதாரமாகக் காணப்படுகின்றது. கோயில்களும், அங்கெழுந்தருளியுள்ள விக்கிரகங்களும் வழிபாட்டிற்குத் துணைபுரிந்து மனிதகுலம் மேம்பட உதவின.

*தொடரும்...*


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA





3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills





வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077






எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #14 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

"கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல காற்றையும் வான வெளியையும் சேர்த்துத் தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்"
- அமரகவி பாரதி.



ஆம், சினிமா எனும் காட்சி ஊடகம் தமிழ் மொழி வாயிலாக செழுமையுறுவதற்கும் பல தீஞ்சுவைக் காவியம் செய்தோரையும், அவர்கள் எழுதுகோல் எத்தகைய காட்சி படைப்புகளை நாடக - திரைப்பட கலை வடிவங்களாகப் படைத்துள்ளன என்று நினைத்துப் பார்ப்பது மட்டுமல்ல, படைப்பாளிகளைப் போற்றுதல் செய்வது தமிழ்மொழியைப் பெருமை படுத்துவதாகும்.

நடிகர் திலகம் அவர்கள் நடித்து வெளிவந்த சில படங்களின் மூலக் கதைகளை எழுதிய நாவலாசிரியர்கள் சிலரை நினைவு படுத்த விரும்புகிறேன். (1960) "பாவை விளக்கு" எனும் திரைப்படத்தின் மூலக்கதாசிரியர் அமரர். அகிலன் அவர்கள். நாவலின் தலைப்பிலேயே படம் வெளிவந்தது. 1960 இல் வெளியான திரைப்படத்திற்கு உரையாடல் எழுதி இயக்கியவர் கலைஞர். ஏ.பி நாகராஜன் ஆவார். மீண்டும் அகிலன் அவர்களால் எழுதப்பெற்ற "வாழ்வு எங்கே" நாவல் "குலமகள் ராதை" (1963) எனும் பெயரில் வெளிவந்தது. 1960இல் அமரர் டாக்டர். மு.வரதராஜனார் எழுதிய "பெற்ற மனம்" நாவல் அதே தலைப்பில் படமாயிற்று. 1955இல் அமரர். கல்கியின் "கள்வனின் காதலி" கவிஞர் எஸ் டி சுந்தரம் அவர்களுடைய உரையாடலுடன் வெளியானது. இப்படத்தின் மூலம் முதன்முதலாக நடிகை பி பானுமதியுடன் நாயகனாக இணைந்தார் சிவாஜி அவர்கள்.

பிரபல நாவலாசிரியை "லக்ஷ்மி" (திருமதி. டாக்டர். திரிபுரசுந்தரி) அவர்கள் எழுதிய நாவலான "பெண்மனம்" கலைஞர் மு கருணாநிதி அவர்களுடைய உரையாடலுடன் "இருவர் உள்ளம்" (1963) எனும் சிறந்த சமூக குடும்ப படமாக வெளியானது. இப்படத்தில் சிவாஜி அவர்களது நடிப்பாற்றலுக்குச் சற்றும் சளைக்காது அபிநய சரஸ்வதி பி சரோஜா தேவி இணையாக நடித்து பாராட்டு பெற்றார். 1969இல் "ஜெயகாந்தன்" அவர்களது நாவலான "காவல் தெய்வம்" திரைப்படத்தில் இதுவரை யாரும் செய்யத் துணியாத "மரமேறி கள்ளு சீவும்" சாமுண்டி பாத்திரமேற்று நடித்திருப்பார் நமது நடிகர் திலகம். பிரபல குணச்சித்திர நடிகர் எஸ்வி சுப்பையா அவர்களது படம் இதுவாகும். நினைவில் வந்த சில நாவல்களை மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளேன். அட, அமரர். கொத்தமங்கலம் சுப்பு "ஆனந்தவிகடனில்" எழுதிய "தில்லானா மோகனாம்பாள்" காவியத்தை எப்படி மறப்பேன். அமரர் ஏ பி நாகராஜன் எழுதிய மிகச்சிறந்த உரையாடல் சித்திரம் என, இயக்குனர் சிகரம் கே.பி சாரால் பாராட்டப்பெற்ற திரைக்கலை காவியமாகும். பல வங்க நாவல் ஆசிரியர்களும் - மராத்திய நாவலாசிரியர்களும் எழுதிய நாவல்களை மூலமாகக் கொண்டு பல வெற்றிப்படங்களில் நடித்து புகழ் பெற்றது மட்டுமல்லாமல், படைப்பாளிகளையும் நன்கு அறிய வைத்தவர் நமது சிவாஜி அவர்கள். நடிகர் திலகம் அவர்களுக்கு ஏற்றவாறு பாத்திரத்தின் குணச்சித்திரத்திற்கேற்றாப்போல் வசனம் எழுதி புகழ் அடைந்த தமிழாசிரியர்கள் சிலரை நினைவுபடுத்திப் பெருமை கொள்வதானால்..

கலைஞர் மு கருணாநிதி - ஸ்ரீதர் - விசி குகநாதன் - கவியரசு கண்ணதாசன் வசனம் எழுதியது "தெனாலிராமன்" மட்டும் (1956) ஆரூர்தாஸ், சோலைமலை - பாலமுருகன் - வியட்னாம் வீடு சுந்தரம் - ஏ எல் நாராயணன் - சக்தி - கிரு'ணசாமி - கே எஸ் கோபாலகிரு'ணன் - ஜி என் பாலசுப்பிரமணியம் "தங்கப்பதக்கம்" மகேந்திரன் "கூண்டுக்கிளி" விந்தன் ஆகியோர் முக்கியமானவர்களாகும். பேரறிஞர் அண்ணா கதை மட்டும் எழுத மு க வசனம். மக்கள் திலகம் எம் ஜி ஆரும், நடிகர் திலகம் (ரங்கோன் ராதா) சிவாஜி கணேசன் இருவரும் இணைந்து நடித்த ஒரே படமான, டி ஆர் ராமண்ணா இயக்கிய "கூண்டுக்கிளி" 1954 திரைப்படத்திற்கு வசனம் எழுதியவர் தான் "விந்தன்" ஆகும். சிவாஜி நடித்த அன்பு (1953) படத்திற்கும் இவரே ஆசிரியர். யார் இந்த விந்தன்!

"கல்கி" ஆசிரியராக இருந்த பேராசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மேற்பார்வையில் அச்சுக்கோர்ப்பாளராகவிருந்து வாசித்து வாசித்து சிறுகதை - நாவல் எழுதும் அளவிற்கு ஆற்றல் மிகுந்தவராக வளர்ந்துவந்த கோவிந்தன் எனும் சிற்றூழியரை "விந்தன்" ஆக திரைப்படத்திற்கு உரையாடல் எழுதும் அளவிற்கு ஆசி கூறி வளர்த்துவிட்ட பெருமை கல்கி அவர்களுக்கேயுரியது. அதேபோல் தமிழ் சினிமா வெறுமனே பொழுது போக்கும் ஊடக காட்சியல்ல. அந்தக்கால சினிமா பிரியர்கள் பலர் பள்ளியில் முறையே கல்வி பயிலாமல் சினிமா எனும் கலைக்கூடத்தில் கூட மிகச் சிறந்த கதைசொல்லிகளாகவும் வசனம் எழுதுபவர்களுமாகி வலம் வந்தமைக்கு ஆதர்ச புரு'ர்களாக விளங்கியவர்களுள் முக்கியமான கலைஞர் நடிகர்திலகம் அவர்களே என்றால் அது மிகையல்ல.

இவ் அநுபவம் திரைப்படப்பாடலாசிரியர்களுக்கும் பொருந்தும். முத்தாய்ப்பாக நடிகர் திலகம் "ஆரூரான்" எனப் பாசத்துடன் அழைக்கும் கதை வசனகர்த்தா ஆரூர்தாஸ் சிவாஜி படங்களுக்கு வசனம் எழுதுவதற்கு அறிமுகமான நினைவுகளை உங்களோடு மீண்டும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.



ஆரூரார் கூறியதாவது, இந்த சம்பவம் பற்றி நான் அறிந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. "என் எழுத்துக்களில் ஈடுபாடு கொண்டவரும் நான் கதை வசனம் எழுதிய முதல் படமான தேவர் பிலிம்ஸ் தயாரிப்பான "வாழ வைத்த தெய்வம்" (1959) படத்தின் கதாநாயகன் திரு. ஜெமினி கணேசன் என்னிடம் தாஸ் நீ சிவாஜிகணேசன் படத்திற்கு வசனம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன். அதில் நானும் சாவித்திரியும் நடிக்கிறோம். பீம்சிங் தான் டைரக்ட் செய்யப்போகிறார் என்றார்! "எதிர்பாராத இந்த இனிய செய்தியை கேட்ட நான் அந்த நொடிப்பொழுதில் இமயத்தின் விளிம்பை தாவிப்பிடித்து எவரஸ்ட் முகட்டை எட்டிப் பிடித்தது போல் உணர்ந்தேன்". தட்டிப் பார்த்து ஆட்டி பார்த்து இவன் முற்றி விட்டானா? என்று கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கடினமான காலம் அது! என்னை சிவாஜி கணேசன் தட்டிப் பார்க்காமல், பீம்சிங் ஆட்டி பார்க்காமல் வசனம் எழுதும் பொறுப்பை ஏற்றேன். அன்புள்ள வாசகர்களே திறமையுள்ள ஒருவனுக்குத் சரியான சந்தர்ப்பமும் அதிர்'டமும் கைகூடி ஒரே நேர்கோட்டில் வந்தால் அவன் சிகரங்களை நோக்கி சிறகடிப்பான் என்பதற்கு ஆரூர்தாஸ் அனுபவம் ஒரு சான்று! நாளை நீங்களும் ஒரு வசனகர்த்தாவாகவோ - நடிகராகவோ கூட மிளிரலாம். இதோ சிவாஜி படத்திற்கு பாசமலர் (1961) ஆரூர்தாஸ் எழுதிய முதல் சீன்.

முதலாளி ராஜசேகரனும் (சிவாஜி) தொழிலாளி ஆனந்தனும் (ஜெமினி) மோதிக் கொள்கிற காட்சி இது!

சிவாஜி: பொறியில் பலகாரம் வைப்பது எலியின் பசியைப் போக்கவா? புற்றுக்கு அருகில் நின்று மகுடி ஊதுவது நாகத்தின் காதுகளை நாதத்தால் குளிரவைக்கவா? காட்டிலே குழி பறிப்பது யானை ஓய்வு பெறுவதற்காகவா? கணையை வில்லிலே பூட்டுவது கலைஞனுக்கு வேடிக்கை காட்டவா?... அல்ல... இதெல்லாம் பிறர் துன்பத்தில் இன்பம் காண வேண்டும் என்ற பேய் வெறி..! அந்த வெறி தான் உனக்கும்...

ஜெமினி: தவறு.. மெழுகுவர்த்தி எரிந்து ஒளியைக் கொடுப்பதோடு தன் மேனியையும் உருக்கிக் கொள்கிறது. ஊதுபத்தி நறுமணத்தை கொடுத்தபிறகு உருவமற்று சாம்பலாகிறது, தேய்ந்து தேய்ந்து மணத்தைக் கொடுக்கும் சந்தனக்கட்டை போன்றவர்கள் தியாகிகளும் பொதுநலவாதி களும் என்பதை புரிந்து கொள்!.... இவ்வாறான வசனங்களைக் கொண்ட காட்சிகளை நான் படித்து முடித்ததும், சிவாஜி ஜெமினியிடம் சொன்னார், "எனக்கு ஒரு அருமையான வசனகர்த்தாவை அறிமுகம் செய்தாய்"! களத்தில் வெற்றி கண்ட வீரன் வாளை முத்தமிடுவது போல் என் எழுதுகோலை முத்தமிட்டேன். ஜெமினி என்னை தனியே அழைத்து இனிமே இங்கே நீதான் ஆஸ்தான ஆசிரியர்!"

அந்த முதல் படம் அண்ணன் தங்கை பாசத்திற்கு இன்று வரை ஏன் என்றைக்கும் ஒரு எல்லையாகவும் எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்ற பசுமையான "பாசமலர்"

இரண்டாவது படம் படித்தால் மட்டும் போதுமா? தொடர்ந்து "பார்த்தால் பசி தீரும்" "பார் மகளே பார்" "புதிய பறவை" "அன்னை இல்லம்" "தெய்வமகன்" "தங்கை" "இருமலர்கள்" "தேனும் பாலும்" "பைலட் பிரேம்நாத்" இப்படி முத்து முத்தாக நடிகர் திலகத்தின் 30 படங்களுக்கு மேல் எழுதினேன், அவருக்கு அதிகமான படங்கள் எழுதியவன் நான் என்றே நினைக்கிறேன்.

பாசத்தால் என்னை "ஆரூரான்" என்று அழைக்கும் ஒரே ஒரு நாக்கு! அந்த நாக்கில் மணக்கும் நற்றமிழ்! அந்த நற்றமிழ் நாக்கிலிருந்து தாள கதியுடன் பீறிட்டு வெளிப்படும் கோர்வையின் இசைக்கோலம்! ஆஹா!.. அவர் ஒருவரே! .. என்றைக்கும் அவர் ஒருவரே! .. அவர்தான் நடிகர் திலகம்! ஒரு நடிப்புச் சாசனம்! சரித்திரம் படைத்த அந்த சாசனத்தின் புகழ்பரப்பும் பக்கங்கள் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் புரட்டிப் பார்க்கப்படும்!

இவ்வாறு பல ஆண்டுகளுக்கு முன் எழுதியும் - பேசியுமிருந்தார் ஆரூர்தாஸ்.

அடுத்த வாரம் காட்சிகள் விரியும்...

## ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஸ்ரீ அபிராமி திருமணமாலை
### முன்கட்டணம் $30

**எம்மிடம் பட்டதாரிகள், டாக்டர்கள், என்ஜினியர்கள், College, High School முடித்த ஆண், பெண்கள், Factory இல் வேலை செய்பவர்கள், மற்றும் விவாகரத்துப் பெற்றவர்கள், இலங்கை, இந்தியா, பிரான்ஸ், லண்டன், சுவிஸ், டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆண், பெண்களின் சாதகங்கள் உள்ளன. மண மக்களைத் தேடி வருபவர்கள் சாதகத்துடன், படத்தையும் நேரில் கொண்டு வாருங்கள். நன்றி.**



**ராம் அலைக்ஷாண்டர்**
**416-720-8975**

ஆண் - பிரான்ஸ் - No. P.R. DOB: 04-09-1986 - Canada, UK, Denmark, Swissland ஆகிய இடங்களிலிருந்து மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

26-08-1987 - உத்திரம் -தொழில்நுட்ப Officer யாழ்ப்பாணம்
16-08-1986 CHEF பூராடம் Computer Science, Canada
19-10-85 பூராடம் MSC. MBA. Tamil Nade Hospital
பெண் - DOB 13-01-1988 - சுவாதி - கனடா
பெண் - DOB 09-08-1988 புனர்பூசம் - கனடா
பெண் - DOB 22-06-1987 பரணி - B.Sc. - கனடா
பெண் - DOB 21-08-1988 - உத்திராடம் Uni. Nurse. கனடா
ஆகியோருக்கு மணமக்களை எதிர்பார்க்கின்றோம்.

எங்களிடம் விஸ்வப்பிரம்மா, சீவல் தொழிலாளர்கள், மேலோங்கியோர், சிகை அலங்கரிப்பாளர், கோ, மற்றும் பல ஜாதகங்கள் படத்துடன் எம்மிடம் இருக்கின்றன.

தமிழீழ விடுதலைக்காக 14 நாட்களாக தங்கள் உடலை வருத்தி நடைப் பயணமாகச் சென்று தமிழினத்திற்கான விடுதலைக்காக மகஜரை கனடியப் பிரதமிடம் கையளித்து விட்டு திரும்பியது மட்டுமல்லாமல், உலகத் தமிழர்களை நம் பக்கம் திரும்பிப்பார்க்க வைத்த பெருமைகுக்ரிய தமிழ் மறவர்களை பாராட்டும்

**திருமண ஒப்புவிப்பாளர். ராம் அலைக்ஷாண்டர்**
416-720-8975

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI

PAWN BROKERS





25

வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

பவுண் வங்கி

தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# SKN FINANCIAL

www.sknfinancial.com




**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..(2% முதல்)
நிறைந்த பெறுமதி!...

www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# அன்பின் தொனி - 579

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.**

பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலடையாதே, நியாயக்கேடுசெய்கிறவர்கள்மேல் பொறாமைகொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள். கர்த்தரை நம்பி நன்மைசெய், தேசத் தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டு தல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரி யத்தை வாய்க்கப்பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு, காரியசித்தியுள்ளவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே. கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு, பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள், கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான், அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை. சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மன மகிழ்ச்சியாயிருப்பார்கள். துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைத்து, அவன்பேரில் பற்கடிக்கிறான். ஆண்டவர் அவனைப்பார்த்து நகைக்கிறார், அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார். சிறுமையும் எளிமையுமான வனை மடிவிக்கவும், செம்மை மார்க்கத்தாரை விழப்பண்ணவும், துன்மார்க்கர்பட்டயத்தை உருவி, தங்கள் வில்லை நாணே ற்றுகிறார்கள். ஆனாலும் அவர்கள் பட்டயம் அவர்களுடைய இருதயத்திற்குள் உருவிப்போம் அவர்கள் வில்லுகள் முறியும். அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத்திரட்சியைப்பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது. துன்மார் க்கருடைய புயங்கள் முறியும், நீதிமான்களையோ கர்த்தர் தாங்குகிறார்.
**- சங்கீதம் 37: 1-17**

**நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்**

உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார், அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும். அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள். துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள், கர்த்தருடைய சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணத்தைப்போல் புகைந்துபோவார்கள், அவர்கள் புகையாய்ப் புகைந்துபோவார்கள். துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற்போகிறான், நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான். அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள், அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டுபோ வார்கள். நல்ல மனு' னுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார். நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை. அவன் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான், அவன் சந்ததி ஆசீர்வதிக்கப் படும். தீமையை விட்டு விலகி, நன்மை செய், என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய். கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர், அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை, அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள், துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம். நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள். நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும். அவனுடைய தேவன் அருள-ியவேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது, அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை. துன்மார்க்கன் நீதிமான்மேல் கண்வைத்து, அவனைக் கொல்ல வகைதேடுகிறான். கர்த்தரோ அவனை இவன் கையில் விடுவதில்லை, அவன் நியாயம் விசாரிக்கப்படுகையில், அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதுமில்லை. நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள், அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார், துன்மார்க்கர் அறுப்புண்டுபோவதை நீ காண்பாய். கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன், அவன் தனக் கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சைமரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான். ஆனாலும் அவன் ஒழிந்து போனான், பாருங்கள், அவன் இல்லை, அவனைத் தேடினேன், அவன் காணப்படவில்லை. நீ உத்தமனை நோக்கி, செம்மையான வனைப் பார்த்திரு, அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம். அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள், அறுப்புண்டு போவதே துன்மார்க்கரின் முடிவு. நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும், இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களை விடுவிப்பார், அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களைத் துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார்.
**- சங்கீதம் 37: 18- 40**

**என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன் ஆண்டவரே**

கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியா தேயும். உம்முடைய அம்புகள் எனக்குள்ளே தைத்திருக்கிறது, உமது கை என்னை இருத்துகிறது. உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை, என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று. என் மதிகேட்டி னிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன், நாள்முழுதும் துக்கப்பட்டுத்திரிகிறேன். என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது, என் மாம்சத்தில் ஆரோக்கியம்இல்லை. நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன், என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன். ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு முன் பாக இருக்கிறது, என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழம்பி அலைகிறது, என் பெலன் என்ன விட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற்போயிற்று. என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள், என் இனத்தாரும் தூ ரத்திலே நிற்கிறார்கள். என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள், எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப் பேசி, நாள்முழுதும் வஞ்சனை களை யோசிக்கிறார்கள்.
**- சங்கீதம் 38: 1- 12**

*தொடரும்...*

PIANO, GUITAR & DRUM LESSONS
இசைக் கருவிகளை வாசிக்க ஆசையா?
By Toronto Christian Church

Sunday Service @ 3:00 p.m.
Every Sunday
FOR BEGINNERS TO ALL AGES
Starting at 5:00 p.m.
55 Nugget Ave, Unit J, Scarborough, ON
அனைத்து வயதினருக்குமான இசைக்கருவிகளுக்கான வகுப்புகள்
Contact:
905-226-4158 | 647-409-8966 | 647-833-3893

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்:
26 - 07 - 1947



இறைவன் அடியில்:
24 - 09 - 2020

## திரு. கதிரவேல் சீனிவாசகம்

(வசாவிளான்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி மற்றும் கனடா ஆகிய இடங்களை வதிவிடங்களாகவும் கொண்ட திரு. கதிரவேல் சீனிவாசகம் அவர்கள் 24-09-2020 அன்று கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்-லக்சுமி தம்பதியின் மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை-பாக்கியம் (இலங்கை) தம்பதியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சந்திராதேவியின் அன்புக் கணவரும்,

மஞ்சிதா(மஞ்சு- கனடா), விஜேந்திரா (வி.கே – கனடா) கவிதா (கனடா) பதீந்திரா (மெக்ஸ்-கனடா) ரசீந்திரா (ரசி-கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

யோகநாதன் (கனடா), பமிலா (கனடா), றொசானி (கனடா), கிருபாகரன்(கனடா), அம்றீதா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

கனடாவில் வசிக்கும் றியோ, கலிங்ரன், சகானா, அடானா, அவினாஸ், சான்விகா, கரிணி, கீர்த்தன், ரீகன், கேசன், ஆஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனாரும்,

காலஞ்சென்ற வைத்திலிங்கம், காலஞ்சென்ற ராசம்மா, சுந்தரம்மா (இலங்கை) காலஞ்சென்ற நல்லையா, கந்தசாமி (இலங்கை), நல்லம்மா (இலங்கை) ஆகியோரின் அ்னபுச் சகோதரனும்
காலஞ்சென்ற லக்சுமி, காலஞ்சென்ற செல்லையா, சின்னப்பு (இலங்கை), பூலோகம் (இலங்கை), பொன்னு (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

<u>தகவல்</u>

மகள் மஞ்சு: 416 720 1301
மகன் விஜேந்திரா: 647 210 1652
மருமகன் யோகன்: 647 985 1301
மகன் பதி: 289 926 6857
மகள் கவிதா: 647 835 9974

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFE Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
(BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1277 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 25, 2020

# கனடாவில் சிறப்பாக நடைபெற்ற ‘நண்பன்’ விருதுகள் வழங்கும் விழா




















சென்னையை தலைமையகமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு கனடா ஆகிய இடங்களில் கிளைகளைக் கொண்டும் இயங்கிவரும் நண்பன் ஊடக நிறுவனம் முதற் தடவையாக நடத்திய விருதுகள் வழங்கும் விழா கடந்த 20-09-2020 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை கனடாவின் ஸ்காபுறோ நகரில் உள்ள எஸ்டேற் பேங்குவற் விழா மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவின் ஏற்பாடுகள் ‘நண்பன்’ ஊடக நிறுவனத்தின் இணை நிர்வாகியும் உதயன் பிரதம ஆசிரியருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் கனடா இணைப்பாளர் திரு மரியராசா மரியாம்பிள்ளை ஆகியோர் இணைந்து செய்திருந்தனர். ‘நண்பன் இணையத்தளத்தின் சென்னை அலுவலகத்தின் பொறுப்பாளர் அருண் கதாகரனும் அங்கிருந்த வண்ணம் பல ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்து அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்தார். மேலும் நண்பன் குழுவில் பணியாற்றும் விக்னேஸ் அவர்களும் இணைந்து செயற்பட்டார்.

விழாவின் ஆரம்பத்தில் செல்விகள் ஹம்சாயினி சாந்தகுமார், அன்றினா கெங்காதரன் ஆகியோர் கனடிய தேசிய கீதம் தமிழ்த் தாய் வாழ்த்து ஆகியவற்றை இசைத்தனர். அன்றைய தினம் ஐந்து சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பெற்றன.

(தொடர்ச்சி 19 பக்கம்)